பான் நெ. 15.   விலை 2 அணா.   REGD. NO. 464

திராவிடநாடு

மலர் 12   11—10—53   இதழ் 15

நகைப்போம்! நடப்போம்!!

— [அரங்கண்ணல்] —

வடநாட்டாதிக்கம் ஒழிக!

ஓயாமல், முழக்கமிடுகிறார்கள்.

டால்மியாபுரம் வேண்டாம்!

முழக்கமிட்டபடியே, ஊர்வல மாகச் செல்கிறார்கள்.

கல்லக்குடியாக மாற்று!

ரயில்வே போர்டில், தமிழ் பெயரை ஒட்டியபடி, சங்கநாதம் செய்கிறார்கள்.

ஒரு நாளல்ல—இரண்டு நாட்க ளல்ல—88-நாட்களாக!

சுமார் மூன்று மாதமாகிவிட்டது—இம் முழக்கம், துவங்கி. தினசரி, அறப்போர் வீரர்கள் — செல்கிறார் ள்—அமைதியான முறையில், மது உரிமை முழக்கத்தை எழுப்பி விட்டு வருகிறார்கள்.

ஜூலை 15—இந்த உரிமை முழக் ம் எழுப்பச் சென்றதற்காக இழுத் ச் செல்லப்பட்டு, சிறைக்குள்ளே, ட்டப்பட்டார், கலைஞர் கருணா தி. அவரது தமிழ் மணம், சிறைச் ாலைக்குள்ளே முடக்கப்பட்டுவிட் து. ஆறுமாதம்! — ஐயகோ, னைத்தாலே நெஞ்சுவேகும்— ருணாநிதியுடன், முல்லை சத்தி, ஸ்தூரிராஜ், குமரவேல், குழந்தை வேல் எனும் இலட்சியக் காளைகள், ம்மரும் தோழர்கள், ஆறு மாதம்- னுபவித்து வருகிறார்கள். வர்களுடன், இரண்டாவது குழு க்குத் தலைமை வகித்துச்சென்ற, ாக்குடி இராம. சுப்பையாவும்,

★

அவருடன் இன்னும் பல தோழர் களும் 'மூன்று மாதம்' அனுபவித் துக் கொண்டிருக்கிறார்கள். மூன்றா வது குழுவுக்குத் தலைமை வகித்துச் சென்ற கவிஞர் கண்ணதாசன், கோர்ட்டிலே நிறுத்தப்பட்டிருக் கிறார், கழகக் காளையரோடு! திருச்சி மாவட்டச் செயலாளர் அம்பில்—தர்மலிங்கமும் இன்னும் 22-தோழர் களும், குற்றங்கள் சுமத்தப்பட்டு, கோர்ட்டுக்கும் வீட்டுக்குமாக அலைந்துகொண்டிருக்கிறார்கள்.

88-நாட்கள், ஓடிவிட்டன! இன் னல்களும், தொல்லைகளும், தாக்கு தலும் — அதை இலட்சியம் செய் யாது, அறப்போர் வீரர்கள், அனு தினமும், முழக்கமிட்டு வருகிறார் கள்! அறப்போர், 'அந்தமான்' தீவி லல்ல—நடப்பது. 'அகண்ட பார தம்' என்று பெருமையோடு பேசு கிறார்களே, அங்குள்ள ஒரு பகுதி யில்தான், நடைபெற்று வருகிறது.

ஏன், நடைபெறுகிறது? — எல் லோருக்கும், தெரியும்!

*

சோளக் களியா?—கோடு!

சாந்தமாகச் சொல்லுகின்றனர்—தட்டை, எடுத்தவண்ணம் சொல்லு கின்றனர்.

மணி 5-ஆகிவிட்டது — கூண் டுக்கு வா!

இழுத்துப் பூட்டப்படுகிறது— இருளில், கிடக்கிறார்கள். எதிர் நிற் கும், கம்பிகள்தான், அவர்களுக்குத் தோழன் — துணைவி — குடும்பம் எல்லாம்.

"அன்னை, உன் நினைவால், பிணமானாள்!"

'அப்படியா?'—என்று, கண்ணீர் வடித்தபடி, சிறையையும், சித்ர வதைசெய்யும் அரசாங்கத்தையும் நினைத்தபடி, பெருமூச்சுவிட்ட வண்ணம், சிறைக்குள், உலவு கிறார்கள்.

ஒருவரா! இருவரா!!—அல்ல, அல்ல—5000-க்கு மேற்பட்டோர்—பலர், வெளியேறுகிறார்கள்; பலர் வருகிறார்கள். சர்க்காரின் சிறைகள் தோறும் இலட்சியக் காளைகள், நிரம்பி, வழிகின்றனர்.

எங்கே?—சுயராஜ்ய மணம்வீசும் சுதந்திர பூமியில்தான்!

என்ன காரணத்துக்காக? — எல் லோரும், அறிவர்.

*

"விடமுடியாது உங்களை!"

அதிகாரத் தர்பாரோடு, கூறு கிறது, அரசாங்கம்.

"வழக்கு போட்டிருக்கிறீர் களாமே!"

தோழர்கள், கேட்கிறார்கள்—அமைதியும், புன்சிரிப்பும் தவழும் முகத்தோடு.

"அதனுல்தான் உம்மை விடோம்!".

அதிகாரிகள், அரசாங்கத்தின் உத்தரவைக் கூறுகிறுர்கள்.

"வழக்கும் போட்டு — பூட்டியும் வைத்தால்—எங்கள் மீதுள்ள குற்றச்சாட்டுகளை எப்படி மறுப்பது?"

தோழர்கள் 'நீதியும் மங்குகிறதா இந்த நெறியற்றோர் ஆட்சியில்?' என்று நினைத்தபடி, கேட்கிறுர்கள். அதிகாரிகள் பதில் சொல்லவில்லை! ஒரு முறை தோழர்களைப் பார்த்து விட்டு, சென்றுகொண்டேயிருக்கிறுர்கள்.

அந்தப் பார்வை கூறும் பதிலை, தோழர்கள் கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்டிருக்கின்றனர். "ஆதிக்க ஆசை கொண்டலையும் சர்க்காரில் சிக்கிய, எங்களைக் கேட்டு என்ன பயன்? அவர்கள் ஆட்டி வைக்கிறபடி, ஆடுகிறோம்!" என்பதுதானே, பார்வை கூறும் பதில். தோழர்கள், பெருமூச்சுவிடுகிறுர்கள்! இந்தக் காட்சியும், நெல்லைச் சிறையில், நித்யம் நடைபெறுகிறது. தோழர்கள் கே. வி. கே. சாமி, ஆர். எஸ். தங்கப்பழம், எம். எஸ். சிவசாமி, எஸ். நடராஜன் உள்ளிட்ட ஐம்பதுக்கு மேற்பட்ட இலட்சிய வீரர்கள் தாம் இவர்கள்! இவர்களிலே, கழக முன்னணி வீரர்கள் இருக்கிறுர்கள் —தூத்துக்குடி நகரசபை உறுப்பினர்கள் உண்டு — தொழிலாளர் தலைவர்களும் இருக்கின்றனர். இவர்கள், கிடக்கிறுர்கள், சிறையில்! எத்தனை நாட்களாக? மூன்று மாதமாக! மூன்று மாதம்! — விசாரணை முடியாது;வெளியேயும் விடாது—சிறைக் கம்பிகளுக்குள்ளே, மூடப்பட்டுக் கிடக்கிறுர்கள்.

யார், இவர்கள்?—தமிழகம், நன்கு அறியும், இத்தனயர்களை!

ஏன், இத்தொல்லைகளை ஏற்றனர்? —எல்லோரும், அறிவர்.

*

"அண்ணு! உங்களுக்கு இருதய நோய் எப்படியிருக்கிறதோ!"

புன்சிரிப்போடு செல்கின்றனர்...

புன்சிரிப்போடு தென்படும், அவரதுபடத்தைநோக்கிநாடெங்குமுள்ள நல்லோர் கேட்கிறுர்கள். அவரோ, இருதயத்தை ஒரு கையால் பிடித்துக்கொண்டு, இடரையும் ஈட்டிகளையும் வீசும் சர்க்காரின் போக்கை நினைத்தபடி—சிறைச்சாலைக்குள் கிடக்கிறுர்! அவர்கூட உலவி, உன்னதப் பணிபுரிந்த — நால்வர்—சம்பத், நெடுஞ்செழியன், நடராசன், மதியழகன் — அங்கே, அடைபட்டுக் கிடக்கின்றனர்.

"என்ன குற்றம் செய்தோம்?"

சிறைச்சாலையின் உச்சியில், சிங்காரமாகப் பறக்கும், மூவர்ணக் கொடியைப் பார்த்துக் கேட்டவண்ணர், உலவுகிறுர்கள்.

கொடி பறக்கிறது, தென்றலில்! கொடிக்குரியோர் பவனி வருகின்றனர், நாட்டில்!!

"மக்களைத் தூண்டினுய்?"

மதில்களுக்கப்பாலிருக்கும், ஜோதிகள் இவ்வண்ணம் முழக்கமிடுகிறுர்கள்.

"எதைத் தூண்டினேம்?"

அமைதியோடு கேட்கின்றனர்— அராஜகத்தையா — அக்கிரமங்களையா — தண்டவாளத்தைப் பெயர்க்கச் சொல்லியா— தீ மூட்டுமாறு—கத்தி தூக்கித் தாக்குமாறு —எதைத் தூண்டினேம்?

"மக்கள்உள்ளத்தைத்தூண்டினுய்?"

குனிந்த கொள்கையும், உயர்ந்த வாழ்வும் பெற்று, ஊரார் வரிப் பணத்தில் உயிர்வாழும் உத்தமோத்தமர்கள், கூறுகின்றனர்.

"விடுதலை முழக்கம் எழுப்புவது தவரு?"

அவர்கள் கேட்கின்றனர்—பதில் வரவில்லை. முறைத்துப் பார்க்கிறது அரசாங்கம்! வித விதமாகப் பதில் சொல்கிறது!!

அண்ணு, யார்?—அறிவர்யாரும். அவர்தம் தோழர்கள் யார்?—நாட்டுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டிய அவசியமில்லை.

அத்தகையவர்கள் சிறையில் கிடப்பதேன்? — எல்லோரும் அறிவர்.

*

ஆறு பிணங்கள் வீழ்ந்தன!

ஏன், எல்லோரும், அறிவர்!

கரமும் காலும் இழந்தனர் பலர்!

அவர்கள், யார்?—அகண்ட சுயராஜ்ய பூமியில் வாழ்பவர்கள்தான்!

குடும்பங்களிலே ஓயாத அழுகுரல் என்ன காரணம்?

நாடு அறியும் — உலகமும் பேசுகிறது!

இவ்வளவு தொல்லைகள் வீசப்பட்டும்—அவர்கள் — நிமிர்ந்த நெஞ்சினராய் உலவுகிறுர்களே—என்ன காரணம்? — எல்லோரும் அறிவர் தேசியத் தலைவர்கள் உள்பட யாரும் அறிவர்!!

*

1. கல்லக்குடி அறப்போர்
2. 'நான்சென்ஸ்' எதிர்ப்புப்போ[r]
3. கல்வித் திட்ட ஒழிப்புப்போ[r]

மும்முனைப் போராட்டங்களின் விளைவாக, கடந்த மூன்று தி... களாக, தென்னுட்டில் உதயமா... யிருக்கும், அரசியல் சூழ்நிலைகளை எல்லோரும் அறிவர். குக்கிராமத்தில் வாழும் சிறுவர்முதல் கோலோச்சி... திக் குடித்தனம் நடாத்தும் வே... சுரர்வரை, எல்லோரும் அறிவ... இறந்த பிணங்களையெண்ணி எழு... பிய அழுகுரலும், இழந்த கரத்... காட்டியவாறு உலவும் தோழ... களின் காட்சியும், காலிழந்தத... மரத்துண்டை மற்றொரு கால... வைத்து, தத்தித்தத்தி நடைபெ... டும் தனயர்களின் பரிதாபக்கோல... தையும், தமிழ்ச் செல்வம் — பகு... தறிவுப் பெட்டகம் — பைந்தமிழ்... சோலை—இளைஞர் இதயம் — அ... ணுவும் பிறரும், சிறைக்குள் கிடப்... தையும்; அவரது தம்பிகளில் ஒ... வர், மக்கள் மனம் கவர் செல்... கருணாநிதி, 'ஆறுமாதம்' அனு... விப்பதையும், எல்லோரும் அறி...

இந்த நிலைமை ஏற்பட்டதன் கா... ணத்தையும், நாடு இருள் மயமா... கிடப்பதையும், இந்த நேரத்தை... பயன்படுத்த குதர்க்க பு... கொண்ட கோலோச்சிமந்திரி... டவம் ஆடுவதையும், மக்கள் அ... வர்.

கருத்துமாச்சரியம் கொண்ட... ராயினும்—பொறுமைத் தீயால்... கிக் கலங்கும் வீம்பராயினும்... கடந்த மூன்று மாத காலத்... தென்னுட்டில் வளர்ந்திருக்... தியாகச்சுடரின், ஒளியினைப்... எண்ணுமலிருக்க முடியாது.

"எமக்குச் சப்பந்தமில்லை!" ... படிக் கூறலாம் 'எப்போது ஒழி... லாம் இவர்களை' எனும் கு... கொண்டோர்.

"இதைவிடப் பெரிய பு... யன்றோ, செய்யவேண்டும்" ... விதம், யோசனை கூறமுன் வர...

லாத்காரத்தில் ஆசைகொண்ட லர்.

ஆனல், இவர்கள் அனைவரும் தசியத் தோழர்கள் உள்பட, . மு. க. நடாத்திவரும் அறப் பாரினைப்பற்றியும், அதற்குள்ள ரணங்களையும், நன்ருக அறிவர்.

தென்னாட்டில் மட்டுமல்ல வட டு முழுமையும் தெரியும் நமது பாராட்டம் குறித்து.

ஆனல் சென்னை வந்துதிரும்பிய ண்டிதர் மட்டும், நமது அறப்போ னைப்பற்றி அறிந்ததாகக் கூற ல்லை!

அவர் 'அந்தமான் தீவில்' அமர்ந் ருப்பவரல்ல—இந்த அகண்ட ரதத்தின் உச்சியில் அமர்ந்திருப் வர்—இந்த நாட்டின் பிரதமர், வர் தி. மு. க. வின் அறப்போர் ள அறிந்ததாகக்காட்டிக்கொள்ள ல்லை.

'கல்லக்குடி அறப்போர்—ஏன், அது?' ஜனநாயக நாட்டின் ரதமர், கேட்டிருக்க வேண்டும். ான்சென்ஸ் என்று திட்டினேனு, று தான்''

—கண்ணியமுள்ளவர், இவ்விதம் ன், உரைத்திருப்பார். "கல்வித் ட்டம் பிடிக்கவில்லையா? ஆலோ கிறேன், ஆச்சாரியாருடன்''

—நாட்டு மக்களின் குரலுக்குச் வி சாய்க்கும் அரசியல்வாதி, ப்படித்தான் சொல்லியிருப்பார்.

ஆனல், பண்டிதர் தென்னாட்டில் டபெறும் அறப் போர்களைப் றி, எதுவும் கேட்கவில்லை.

பண்டிதரைப்பற்றி 'அவசரக் ர' என்று அண்ணல் காந்தியார், தடவை சொல்லியிருக்கிருர் — த்திரக்காரர்' என்றும் கேள்விப் டிருக்கிருேம். "ஆம்! நான், ண்ட பாரதத்தின் ஒரே ஜோதி னும், என் சொந்தப் புத்தி, ன்ன விட்டுப்போகுமா?'' என்று க்கிச் சென்றிருக்கிருர்.

"நாம்''—அவர் கூறுவது போல, ண்ட பாரதத்தின் ஒரு பகுதி வாழ்வோர்தாம்.

"நாம்'' — விரும்பாவிடினும், வரது அரசுப்பரிபாலனத்தின் தான், கட்டுண்டுகிடக்கிருேம்.

"நாம்'' — அவர் அரசுக்கு வரி லுத்தாமல், இல்லை.

"நாம்''—நான்கு கோடி மக்க ளின் விடுதலைத்தூதர்கள்; அவர்கள் கணக்குப்படி, ஒரு லட்சம் மக்கள்.

"நாம்''—எழுப்பும் குரல், இங்கு மட்டுமல்ல, அவர்கள் கூற்றுப்படி, எங்கெங்கு தென்னாட்டார் வாழ் கின்றனரோ, அங்கெல்லாம்—அக மதாபாத்தில், பம்பாயில், இலங் கையில், மலேயாவில், பர்மாவில், இந்தோசீனத்தில்—இருக்கிருேம்.

எனினும், 'நம் குரலை' — இவர், ஏனென்று கேட்கவில்லை அப்படிக் கேட்பது, அகில உலக ஜோதியான, தனக்கு, அகௌரவம் என நினைத் துப் போயிருக்கிருர்!

இரத்தம் சிந்தி — பிணங்களைத் தந்து—தலைவர்களைச் சிறைக்குள் அனுப்பிவிட்டு—எவ்வளவு கஷ்டங் கள் வரினும் அயராமென்று, அறப் போரைத்தொடர்ந்து நடத்திவரும் 'நம்மை', அவர், 'தன் ஆட்சியில் வாழ்வோர்' என்றே, நினைக்கவில்லை! 'எதிர் காலத்தை' இப்பொழுது, எண்ணிக்கொண்டார் போலும்!! அதனாலேயே, அந்த அறப்போர் களைப்பற்றி எதுவும் கூறவில்லை.

மக்களின் குறைகளைக் கேட்க அந்த நாள் மன்னர்கள் ஆராய்ச்சி மணி கட்டியிருந்தனராம் — அது, அடிக்கப்பட்டால் அரியாசனத்திலம ர்ந்திருக்கும் மன்னன் ஓடோடி யும் வருவானும்.

ஆராய்ச்சி மணி இல்லாத நாள், இது — தீர்மானங்கள் மூலம் கோரிக்கைகளைக் கூறும் காலம். எனவே, நமது குறைகளை, இந்த முடிசூடா மன்னருக்கு அனுப்பி னோம்—பதிலில்லை. எனவே, 'ஆராய்ச்சி மணி'யெனக் கருதி, நமது அறப்போரினைத் துவக்கி னோம். 'அறப்போர் மணி' அடித் துக்கொண்டேயிருக்கிறது— அவரோ, அதைப் பற்றி, எதுவும் கூருது, இருக்கிருர்!

குறைகளை, நிவர்த்திப்பேன் — கூறவில்லை.

குறைகளை, நிவர்த்திக்க முடி யாது!—அப்படியும், கூறவில்லை.

அப்படியானல், பேசாமல் போனாரா?—அதுவும், இல்லை!

பேசினர்! ஏசினர்!! சென்னை ஐலண்டு மைதானத்திலே, 'இமய முதல் குமரி வரை என் தேசம்!' என்று கூறிக்கொள்ளும் பண்டிதர் —இழி சொற்களை வீசினர்!

Tribes .
காட்டுமிராண்டிகள்
Degenerates
இழிந்தவர்கள்
Stupid
புத்தியில்லாதவர்
Nonsensical
பைத்யகாரர்கள்
Fools
மடையர்கள்
Emptiness
அறியாமை நிரம்பியவர்கள்

என்பன போன்ற ஏச்சுமொழி களால் அர்ச்சித்துக், கோபக்குரல் எழுப்பி, அரசியல் நாகரிகத்துக்கு, இழிவை உண்டாக்கினர் — பண்டி தர்.

இந்த வெட்கங்கெட்ட 'ஆரம்ப விழா'வுக்கு, நமது மைதானம், பயன் பட்டிருக்கிறது. அந்த மண்ணுக்கு, வாயிருந்தால், புழுதியாக மாறி, புத்தி போதித்திருக்கும்.

அந்த மண்ணை அள்ளிக் காட்டி 'ஐயா! உம்மைப் பெரியவர் என்று எல்லோரும் கூறுகிருர்கள். ஏன், புழுதிப்பாதை செல்கிறீர்? புரளா தீர்! எமக்கன்றோ, வெட்கமாயிருக் கிறது. ஒரு விடுதலை வீரன், வீண ரானர்—சென்னை மண்ணில்! எனும், பழிச்சொல், ஏற்பட வேண்டாம்'', என்று தக்க அறிவுரை, தந்திருக்க முடியும்.

ஆனல், தலைவர்கள் சிறைக்குச் சென்றபோது, இட்டுச் சென்ற கட்டளை, நம் கரங்களையெல்லாம் கட்டிவிட்டது.

நாம், காட்டுமிராண்டிகளாம்!

நாம், இழிந்தவர்களாம்!

நாம், அறிவிலிகளாம்!

நாம், மடையர்களாம்!

நாம், பைத்யக்காரர்களாம்!!

ஏசினர்! வீசினர்!! இந்தச் சொற் கள்கூட மகிழ்ச்சி அடைந்திருக்கும் தியாகவீரர் குழாம் தி. மு. க. மீது நாம் வீசப்படுகிறேம், எனும் மகிழ்வால்.

அரசியலில் கண்ணியமும்—மாற் ருர் கருத்துக்கு மதிப்பு கொடுத்து வரும் முறையும்—வளர வேண்டும் என்பது, நமது ஆசையாகும்.

அதோடு, எந்தப் பக்கமிருந்து வந்தாலும்—மனிதாபிமானத்தோடு நோக்குவோமே தவிர, மனமாச்சரி யம், கொண்டல்ல.

தி. மு.க-வின், இந்தப்பாதையை, நாட்டோர், அறிவர்.

ஆச்சாரியாரின் பேரிகையாம், 'கல்கி' இதழ், அன்றோர் நாள், இதனை எழுதிற்று — 'உண்மையாகவே, முன்னேற்றம் தான்', என்று வர்ணித்து.

அத்தகைய நம்மை, 'இவர்' ஏசுகிறார்! இத்தகைய சொற்களை வீசுகிறார்!!

உத்தமர் காந்தியார் — நம்மவரல்ல—எனினும் அவர் உயிர் துறந்தபோது, அவரது தியாகத்துக்குச் சிரம் வணங்கத் தவறவில்லை, நாம்.

இரும்பு நெஞ்சர் பட்டேல் — நமக்கு வேண்டியவரல்ல — இறந்தபோது, அவரது செயல் தன்மை குறித்து, பாராட்டத் தவறவில்லை, நாம். கவிதைக் குயில் சரோஜினி, காங்கிரஸ், தலைவி—அதற்காக, சாகாத அவர் கவிதைகளைக் கண்டு, சிந்தை களிக்காமல் போனதில்லை, நாம்.

ஆகஸ்டு 15- அரும்பியபோது வரவேற்றோம். அதற்காகப் பாடுபட்ட காங்கிரஸ் இயக்கத்தின் கவுரத்தை காக்கத் தவறவில்லை, நாம்.

வெள்ளையனை விரட்டுவதற்காக செக்கிழுத்த சிதம்பரனார் பெயரை, திராவிட முன்னேற்றக் கிளைகள் போற்றாமலில்லை—திருப்பூர் குமரனின் நினைவாக பல இடங்களில் கழகங்களும் உண்டு.

ஜமீன்தாரிகளை ஒழிக்கவேண்டுமென்று சட்டம் கொண்டுவந்தபோது, கைகொடுத்தோம், நாம், காளா வெங்கட்ராவ், பாராட்டிப் பேசுமளவுக்கு ஒத்துழைத்தோம்.

மது விலக்கு அமுலுக்கு வந்தபோது, மனமார வரவேற்றோம்— 'இவர்கள் செய்வதா?' என்று பேசவில்லை! ஏசவில்லை!!

அவர்கள் செய்த நன்மைகளைக் கண்டு வாழ்த்தியிருக்கிறோம்! மாற்றுக் கட்சியென்று மன எரிச்சல் கொண்டதில்லை!!

தறியாளர் பிரச்னைக்கு ஆச்சாரியார் ஆதரவு காட்டவந்தபோது அகமகிழ்ந்தோம்.

ராயலசீமா நிவாரண நிதி திரட்டப்பட்டபோது நன்கொடை அனுப்பிற்று — தி. மு. க. 'நமக்கென்ன' என்றிருக்கவில்லை.

ஆச்சாரியார் ஆட்சியில் புயல் வீசியபோது—டில்லி கருணை காட்டாதபோது—திரட்டித் தந்தோம், ரூபாய் முப்பதினாயிரம். ஆச்சாரியார் ஆள்கிறாரே என்று பார்க்கவில்லை! முன் வந்தோம் — உதவினோம்.

இத்தகைய நம்மை—எதிர்க்கட்சியினராயினும் அவர்தம் தியாகத்துக்கு மதிப்பளித்து - செயல் நல்லதானால் ஆதரித்து - உதவி கோரியபோது உதவியளித்து - அரசியல் கண்ணியம் காட்டி வரும் நம்மை— அலகாபாத்தார் இழிமொழி வீசி, ஏளனப்படுத்தினாராம்!

அவரையும்—அவர்தம் சகாக்களையும் அழைக்கும்போது, 'பண்டிதர்' —'ஆச்சாரியார்'—'காமராஜர்' எனும் மரியாதை கொடுத்து அழைக்கும் அரசியல் கண்ணியம் பெற்ற நம்மை அழுகல் மொழியால் அர்ச்சித்தாராம்.

சந்துநடைச் சிந்து மொழி என்பார் நம் பொதுச்செயலாளர். அந்த நடை பயின்றாராம், பண்டிதர்!!

அரசியல் உலகில் வளர்ந்து நிற்கும் பண்டிதரையே உலகு அறிந்து வந்தது. அறிஞர்-மேதை—அயராத உள்ளம் படைத்தவர்—மனித விசுவாசி—மனிதரிலே மாணிக்கம்—என்று இதுபோலப் பலப்பல அடைமொழிகள் உண்டு, அவருக்கு. ஆனால், அது அத்தனையும் வீண்! இதோ பார், என் சுயரூபம் என்று காட்டியிருக்கிறார்!!

மேருமலை எமது நேரு என்பர்.

அருவியன்றோ அவர் பேச்சு என்பர்.

மலை, மண் புற்றாகப் போயிற்று, சென்னையில்! அருவி 'கூவமாக' மாறிற்று, ஐலண்டு மைதானத்தில்!

சந்தைக் கடையில் சாமான்களை விற்போர் பேசிக்கொள்வதுண்டு— நிந்தை மொழியில். காது கூசும் கேட்க. அவர்கள் சாமான்யர்கள்! ஆனால், மோதிலாலின் புதல்வராகப் பிறந்து, மோகனதாஸ் காந்தியின் சீடராகப் போற்றுமளவுக்கு வளர்ந்து, அகில இந்திய காங்கிரசின் தலைவராக 'ஜோதி'யோடு திகழும் பண்டித நேரு—நிந்தை மொழி பேசுகிறார்! சிந்தை குளிர நினைக்கிறார்!!

*

ஆறு பிணங்கள்!
ஆயிரக்கணக்கில் சிறையில்
தலைவர்கள்-கூண்டில்.
கரமிழந்தோர்! காலிழந்தோர்!
ஏராளம்! ஏராளம்!!

ஒரு நாளில், ஊராளும் பாக்கிய...
பெற்ற ஆச்சாரியார், இத்...
கொடுமைகளை வழங்கினார், நம...

இதனைக் காணும் எவர் மனமு...
பதறும்! ஆனால், அலகாபாத்தார்...
ஆச்சாரியாரைப் பார்த்துச் சொ...
னாராம்-"நீங்கள் இவர்கள்மீது பச்சா...
தாபம் காட்டுகிறீர்கள்!" என்...
ஐலண்டு மைதானத்தில்தான் இ...
வண்ணம் கூறியிருக்கிறார், ஆச்சா...
யாரைப்பற்றி!

பிணமலை உருள்வதும், இரத்த...
ஓடுவதும், பச்சாதாபம் காட்...
தாம்!

ஒரு பிரதமர்—ஒரு முதலமை...
சரைப் பார்த்துச் சொல்கிறார்.

'சொல்கிறார்'—என்றால், உற்சா...
மூட்டுகிறார் என்பதே பொருள்.

"வீழ்ந்த உயிர்கள் போதாது—
சுட்டுத் தள்ளு!"

"அடைத்தோர் பட்டியல்
கொஞ்சம்—பிடித்து, அடை"

"உறுப்பிழந்தோர்-நூ...
நூறுமே. செச்சே! ஆயிரக்கண...
கில் வேண்டும்"

இதுதான், அவர் கூறியதற்...
அர்த்தம். அவ்விதம் தூண்டிவி...
கிறார், அலகாபாத்தார்!

அதனாலேயே, அடுத்த நா...
தேனாம்பேட்டையில் பேசிய தியா...
ராயநகர்வாசி செப்பியிருக்கிறார்—
"கடுமையான நடவடிக்கை எடு...
க்கப்போகிறேன்" என்று.

உயிர்களையே இழந்திருக்கிறோ...
—இதைவிட எத்தகைய கடுமை...
யான நடவடிக்கையை, இவர்...
எடுக்கப்போகின்றனர்?

குண்டுமாரிதான்—அடக்குமுறை...
யின் உச்ச கட்டம்' அதை...
அடைந்துவிட்டோம்.

அதைவிட, என்ன கடுமையா...
நடவடிக்கை எடுக்கமுடியும்?

வேண்டுமானால், தென்னாட்டு...
எல்லா மக்களையும் சிறைக்கு...
தள்ளலாம்! தீர்த்துக் கட்டலாம்!

ஆனால், அதற்கான சிறை...
கிடையாது—வீசக் குண்டுகளு...
கிடையாது என்பதை அறிவோம்...

அப்படிச் செய்யவே முற்பட்...
லும்—அவர்கள் சிலர்! நாமோ பல...

(13-ம் பக்கம் பார்க்க)

"தேடித் தேடி!"

தேடிப்பார்த்தாயா?"

ஒரு கடை விடாமல் சுற்றி ...டேன் — எங்கும் கிடைக்க ...."

*

...ந்தைக் கினியவளே! தெரி ...தோ, முழு நிலவு?';

கண்ணாளா! காதலமுதம் பொழி நிலவைத் தேடியா, கண்டு ...க்க வேண்டும்? தெரிகிறதே, ...ருக!"

*

தேடித் தேடி, அலைந்தேன்!—
சித்தமிரங்காயோ?
சிவபிரானே!

*

"தேடித்தேடிப் பார்த்தேன் ...டைக்கவில்லை, எஜமான்!"

"என்னடா?"

"உங்களை 'நல்லவன்' என்று ...க் கூடியவன், கிடைக்கிறானா, ...று!';

*

தேடித்தேடி — இதன்-பொருள், ...வென்பதை, தோழர்கள், அறி ...—எனினும், சில உதாரணங்களைக் ...வேண்டியிருக்கிறது — 'தேடித் ...டி'ப் பார்க்கச் சொன்னவர், ...ன்பர் ஆச்சாரியார், என்பதால்!

திருப்பூரில் பேசிய போது, ...சியத் தோழர்களை, 'தேடித் ...டி' அலையச் சொன்னாராம் — ...ருகக் கருதாதீர்கள்!—காங்கிரஸ் ...ய்திருக்கிற நல்ல காரியங்களைத் ...டித்தேடி, கண்டு பிடித்து, ...பாது மக்களுக்கு விளக்க ...ண்டும்," என்றாராம்.

ஆச்சாரியார், முதலமைச்சர்! — ...ண்டித நேருவால், மேதையெனப் ...பாற்றப்படும், பெருமை பெற்றவர் காங்கிரஸ் தலைவர்களுள் முக்கிய ...னவர். அவர், கூறியிருக்கிறார், ...தேடித்தேடி, கண்டுபிடிக்குமாறு!!

காங்கிரஸ் தொண்டர்கள், 'கொலம்பஸ்'களாக வேண்டுமாம்—மகிழ்ச்சிதான், நடக்கும்! கத்தி எங்கேகிடைக்கும்தடி தூக்கஆளுக்கு கூலி என்ன—அதற்கு எங்கே பணம் கிடைக்கும்—என்றெல்லாம், அலையாமல், இதையாவது, அவர்கள் 'தேடித்தேடி' பார்க்கட்டும், என்பதால். ஆனால், தொண்டர்கள், 'தேடித்தேடி' பார்த்து, நன்மைகளைக் 'கணடு பிடிக்க'ச் சொல்கிறாரே, ஆச்சாரியார் – அவரைப் பார்த்துக் கேட்க திருப்பூர் காங்கிரஸ் தொண்டர்கள் மறந்து விட்டார்கள், போலும்.

காங்கிரஸ் செய்த நன்மைகளை, தேடித்தேடி, பார்க்கட்டும்—ஆட்சேபமில்லை.

ஆனால், அந்த நன்மைகளைச் செய்து தர வேண்டியது யார்?—மந்திரிகள் தானே!

ஆனால் நாட்டை ஆளும் முதலமைச்சர், 'பரீட்சை' வைப்பதற்காகவா, பரிபாலனம் செய்கிறார்?

தேடிப்பார்க்க வேண்டுமாம்!—காங்கிரஸ் செய்த நன்மை, எங்கே சிதறிக்கிடக்கிறதென்று, ஆளுக்கொரு, பூதக்கண்ணாடியும் — வலையும் — சல்லடையும் — ஏந்திப் புறப்பட வேண்டுமா, எப்படி, என்பதை ஆச்சாரியார், விளக்கவில்லை.

அவர், தலைவரல்லவா! அதிலும் சர்வாதிகாரத்தலைவரல்லவா!! ஆகவே மிடுக்கொடு, உத்தரவிட்டிருக்கிறார் தேசியத் தொண்டர்களுக்கு.

காங்கிரஸ் செய்த நன்மைகளைத் தேடிக்கண்டுபிடிக்கச் சொல்லும் ஆச்சாரியார்—அவர்கள், எங்கே சென்று தேடுவது?—என்பதையும் கூறவில்லை. இந்துமகா சமுத்திரத்திலா—வங்காளக் குடாக்கடலிலா—அரபிக் கடலிலா—எங்கு போய்க் கிடக்கிறதோ, அந்த நன்மைகள்?

தேடித்தேடி, கண்டுபிடிக்க வேண்டுமாம்!—தேசத்தை ஆள்பவர், சொல்லுகிறார்!! அதிலும், சாதாரணமானவரல்ல, — அவர்கள் மொழிப்படி, சாணக்யர்!!! அவர் கூறுகிறார், தேடித்தேடி கண்டு பிடிக்கச்சொல்லி — காங்கிரஸ் தொண்டர்களை என்னவென்று நினைத்தாரோ அவர்!—தேடித்தேடி கண்டுபிடிக்கவேண்டுமாம்!! அவ்விதம் கண்டுபிடித்து, அரசாங்கத்தின் மகிமைகளை, மக்களுக்கு எடுத்துரைக்கவேண்டுமாம். "ஆள்கிறேன், நான் அதில் குற்றங் குறைகள் நிறைந்திருக்கலாம்—அதற்கிடையில் எங்காவது, நன்மைகள், ஏதாவது இருக்கலாம்—அதைத் தேடி கண்டுபிடித்து—அவைகளைப் பெரிதாக்கி மக்கள் முன்வைத்து, குற்றங்குறைகளை மறைக்கவேண்டும்!" அதுதான், உண்மைக் காங்கிரஸ் தொண்டனின் கடமை என்கிறார்.

"ஐயனே! தேடித்தேடிக் கண்டு பிடிக்குமளவு ஏன் எம்மை திகைக்க வைத்தீர், "என்று, திருப்பூர் தேசியத் தோழர்கள், எவரும், கேட்கா விட்டாலும் — எண்ணமலிருந்திருக்க முடியாது.

"பக்தா! இது என்ன?—பழரசம்! பக்கமிருப்பது, யார்?—பாவை!! பழரசமருந்தி, பாவையுடன், சுகித்திருப்பேன், நான். பரமசிஷ்யர்கள் வரலாம் அவர்களை வெளியே நிறுத்திவிடு. மதுபோதையில், நினைவிழந்து நான் ஏதாவது, உளறினாலும் உளறலாம். வெளியிலிருக்கும் அவர்கள் காதுக்கெட்டி ஏதாவது, கேட்டால் — அவர்களுக்கு, எதையாவது கூறு! ஈசன் நாமத்தில் பதிந்திருக்கும் அற்புத மகிமையையோ —புராண இதிகாசத்தில் பொதிந்திருக்கும் பொன்னுரையையோ எடுத்துச் சொல்! என் நிலையை அம்பலமாக்கிடாதே! உன் கூச்சல் என் உளறலை, அடக்க வேண்டும். தெரியுமா?" என்று, மடாதிபதி, சீடகோடியிடம், கூறவும் அஞ்சும் காலம் இது! ஆனால் அரசபூபதி—அதுவும் ஜனநாயக சுய நிர்ணய சுதந்திரக் குடியரசின், தலைவராக வீற்றிருந்தவர், வெளியிடுகிறார், இவ்விதம். காங்கிரசின் பெருமைபேசி, இவரைக் காப்பாற்ற வேண்டுமாம்! காங்கிரசாட்சி செய்த நன்மைகளைத் தேடித்தேடி எடுத்து, குற்றங் குறைகளைப்பேசாதபடி, உரத்துப்பேசி ஊரையடக்க வேண்டுமாம்!! ஊராள்பவர், வெளி

யிடுகிறார், இதனை —இவரைத்தான்
மேதையென்றனர். ராஜாஜி ஆட்
சிக்கு வந்துவிட்டால்,எப்படியிக்கும்
தெரியுமா, என்று புகழ் பாடினர்.
இவர், கூறுவது, இது!! ஆச்சாரியார்
அறிவுரைப்படி, காங்கிரஸ் அன்பர்
கள் 'தேடித்தேடி'ச் செல்லட்டும்.
என்ன கிடைக்கும்? தூத்துக்குடிக்
குச் சென்றால், துப்பாக்கிக்கு இரை
யான மக்களின் மனைவியர்கள்
அறுத்த மஞ்சள் தாலிக்கயிறுகளைக்
காணலாம்! கல்லக்குடியில் உயிர்
நீத்தவரின் பெற்றோர் சிந்தும் கண்
ணீர்த்துளிகளைக்கையிலேஏந்தலாம்!
சேலம் சிறைப்பக்கம் சென்று பார்த்
தால், சிறைக்குள் செத்துமடிந்த 22
தோழர்களின், எலும்புகளைப்
பொறுக்கலாம்! நெசவாளர்கள் வீடு
நோக்கிச் சென்றால் உத்திரத்தில்—
தொங்கும் பிணங்களைக் காணலாம்!
இவைகளைக் காணப்புறப்பட்டுச்
செல்லும்போது, வீதிகளைப்பார்த்
தால், விசித்திர விசித்திரமான
காட்சிகளைக்காணலாம்! தொழிலா
ளர் குடிசைக்குள் புகுந்தால்—
அங்கு இருக்கும் அணைந்த அடுப்பு,
அதில் தூங்கும் பூனை, அருகே
அழுதபடி கிடக்கும் குழந்தை,
அதனை அணைத்தபடிமெய்சோர்ந்து
கிடக்கும் தாய், ஆகிய 'அழகான
காட்சி'களைக் காணலாம்! இதைத்
தவிர, அவர்கள் தேடித்தேடிக் கண்டு
பிடித்து, எதைச் செப்ப முடியும்?
வேண்டுமானால், "தேடித்தேடி",
தாம், சம்பாதித்த பொருள்களை
விளக்கமாக, மக்களிடம், கூறலாம்!
கள்ள மார்க்கட்டில் 'தேடி'யது—
லைசென்ஸ் வாங்கித்தருவதாகச்
சொல்லி 'தேடி'யது—மந்திரி, எனக்
குத் தெரிந்தவரெனக் கூறித்'தேடி'
யது—எம். எல். ஏ. வாக்குகிறேன்
என்று உறுதித்தந்து 'தேடி'யது—
இவைகளை, தேடித்தேடி ஆராயா
மல் கூடச் சொல்லமுடியும்! இந்த
விஷயங்களைக் கண்ணாரக்கண்டதால்
தானே, பல உண்மைத்தியாகிகளைக்
காங்கிரஸ் கட்சிக்குள் சென்று நாம்
தேடித்தேடி'ப் பார்த்தாலும், காண
முடியவில்லை. மனவேதனைப்பட்டு,
உள்ளம் உடைந்து, உருமாறி,
கட்சியைத்துறந்து, அரசியல் துற
வறம் பூண்டு விட்டார்கள்! அதனை,
அறியாதவரும் அல்ல ஆச்சாரியார்,
ஆயினும், தேடித்தேடி, கண்டுபிடிக்
கச் சொல்லுகிறார்! அதுவும் தொண்
டர்களை!! ஆச்சரியமான ஆசாமி!!!

தலை குனியுங்கள்!

மல்லிகைத் தோட்டத்தில், மாற்
றான்வீட்டுக் காட்டெருமைபுகுந்து,
நாசம் விளைவிப்பதைக் கண்டு,
அகமகிழ்வோரைப் பார்த்ததில்லை,
நாம்! ஆனால், கோவை நகராட்சி
மன்றக் காங்கிரஸ் நண்பர்கள், வீம்
புக்காக, விரோதிக்கு வெண்சாமரம்
வீசியிருக்கிறார்கள்!!

அண்மையில், நகராட்சி மன்றத்
தில், முக்கியமான பிரச்சனை
யொன்று, விவாதிக்கப்பட்டு முடிவு
கட்டப்பட்டிருக்கிறது. அதுபோது,
அவர்கள், நடந்து கொண்ட முறை
யினைக் கேட்டுப், நல்லோர், நாணித்
தலை குனிவர், என்பது நிச்சயம்.

கொத்தித் தின்னும் கொடும்
பாம்பு, நகரைச் சுற்றி வளைந்து,
அகப்படுவதையெல்லாம் விழுங்க
நினைத்தால், அதனை, எதிர்த்து
வீழ்த்தவே, முன்வருவர்—எவரும்.
அந்த வகையில், சில கவுன்சிலர்கள்.
முறியடித்திருக்கிறார்கள்!

எதிர்க் கட்சியினர் தீர்மானம்
கொண்டுவருவதும்—அதனை, அதி
காரக் கட்சியினர் எதிர்த்துத்
தோற்கடிப்பதும், சகஜமான விஷ
யம்தான் ஆனால், இரு கட்சிகளுக்
கும் பொதுவான — நாட்டின் நல்
வாழ்வுக்குகந்த தான—சில விஷயங்
களிலாவது, இரண்டும் ஒற்றுமைப்
பட்டால்தான், மக்களின் வாழ்வில்
மலர்ச்சியையும் உணர்ச்சியையும்
பூக்கச் செய்யமுடியும். 'நல்ல தண்
ணீர்க் கிணறு வெட்டுங்கள்!', என
எதிர் கட்சி கேட்க, 'சேச்சே!
வெட்டாதீர்கள்!,' என்று அதிகாரக்
கட்சி கூறுமேயானால், நல்லோர்
நகைப்பர்.

ஆனால், அத்தகைய நகைப்பையும்
உணர்ந்து தெளிய முடியாத அள
வுக்கு, பொறுப்புணர்ந்த காங்கிர
சாரில் சிலர் சென்றுகொண்டிருக்
கின்றனரெனும் செய்தி, புதுவாழ்வு
விரும்புவோருக்கு, மன வேதனை
யைத்தான் தரும்.

நல்ல காரியங்களைச் செய்வதில்
கட்சி யென்ன! வீம்பென்ன!!

இந்த நன்னோக்குடனேயே, சில
காங்கிரசல்லாத கவுன்சிலர்கள், நக
சபையில் ஒரு தீர்மானம் கொண்
வந்திருக்கிறார்கள்—கோவை நகரி
ஒரு பகுதிக்கு மறைந்த பாவி
வ. உ. சி. அவர்கள் பெயரையாவ
தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவ
கள் பெயரையாவது வைத்தி
வேண்டும், என்று. ஆனால், இத
ஏற்கவில்லை, காங்கிரஸ் கட்சியின

சிதம்பரனார் — செக்கிழுத்
சிதைந்தார்! கப்பலோட்டிய முத
தமிழன், அவர்! காங்கிரசுக்கா
பாடுபட்டு உழைத்தவர்!

திரு. வி. க.—தொழிலியக்க
கண்டவர்! வெள்ளை ஆதிக்கத்
விரட்ட மூவர்ணக் கொடி ஏந்தி
வர்! முத்தமிழ்க் கடல்!

இந்த இருவரில், ஒருவருடை
பெயரையும் வைக்க விரும்பவில்
காங்கிரஸ் கட்சியினர்.

இந்தப் பெயர்களைச் சூட்
வேண்டுமென்று, எதிர்க் கட்சியின
குறிப்பிட்ட இடத்தின் 'பெயர்'—
இந்தப் பெயர்களைவிடச் சிறந்த
அல்ல! பண்டைத் தமிழரின் புக
விளங்கும் நாமம் படைத்த
அல்ல! அல்ல!! தேசோத்தமர்களி
நினைவாக விளங்கும் பகுதிய
இல்லவே இல்லை! ஒரு சுரண்ட
காரன் பெயர்—தன்னுடைய பண
பலத்தின்மூலம் தென்னாட்டை
வீழ்த்தத் துடிக்கும் ஆலை வேந்த
னின் பெயர் — டாடாபாத் எனும்
பெயரோடு இருக்கும் பகுதிதா
அது. அதனையே தியாகச் சீல
களின் பெயரால் அழைக்கவேண்
மென விரும்பினர்! ஆனால், காங்கி
ரஸ் நண்பர்கள் ஒப்பவில்லை
எட்டிக்குப் போட்டியா
நடந்திருக்கிறார்கள்! "டாடாபா
என்பதை டாடாபுரம் என்
மாற்றினால் போதும்—திரு. வி. க.
பெயரையோ, வ. உ. சி. பெய
ரையோ வைத்தல்கூடாது" என்
முடிவுகட்டி யிருக்கிறார்கள். இந்
முடிவினை 'இலட்சியத்துக்காக வா
வதாக'க் கூறிடும் இளம் உள்ள
ளங்களின் பார்வைக்குவைக்கிறோம்
கட்சியல்ல பெரிது — நேர்மையும்
மானுபிமானமும் மறைந்துவிடாம
பாதுகாத்துக்கொள்ள வேண்டும்
அந்தப் பாதை, இன்றைய 'தே
யத்துக்கு'ப் பிடிக்கவில்லை. அந்தோ
எவ்வளவு அநாவசியமான வீம்பு!

★

—சிந்தனைக்கு வைக்கிறோம்—

"ஒருகை பார்க்கப் போகிறோம்!—உங்களை, இப்படி விட்டுவிடுவோமென்று எண்ணாதீர்கள்"

ஆச்சாரியார், காஞ்சி வந்திருந்தபோது அவர் முன்னிலையில் ஒரு காங்கிரஸ் தோழர் பேசினார்; அதனை, கண்டிக்கவோ-புத்திமதி கூறவோ—முன்வரவில்லை, ஆச்சாரியார்

"காங்கிரஸ்காரர்களே! தயாராயிருங்கள். தக்க பாடம் கற்பிக்கவேண்டும். சரியானபடி, பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்களைப்பற்றி, சரித்திரத்தில் தேடிபார்த்துக்கொள்ளுமளவுக்கு செய்யவேண்டும். அவர்கள் கணக்கை முடிவு செய்யவேண்டும்"

இவ்விதம் தேனாம்பேட்டைக் காங்கிரஸ் மாநாட்டில் அறைகூவல் விடுத்தார், ஆச்சாரியார். அந்த மாநாட்டு நிகழ்ச்சிகளில் பங்குகொண்ட முக்கிய மானவர்களில் ஒருவர், சென்னை கருப்புக் கொடி நிகழ்ச்சியின்போது கலவரம் செய்த காங்கிரஸ் தோழராவார்.

*

"திராவிட முன்னேற்றக் கழக நடவடிக்கைகளை எதிர்க்க, காங்கிரஸ்காரர்கள் தயாராயிருக்கின்றனர்—என்பதை எச்சரிக்கிறேன்"

என்று, திருப்பூரில் பேசிய தோழர் ராஜாராம்நாயுடு (அரசுப் பொறுப்பிலிருப்பவர்) பேசியிருக்கிறார். அதுபோலவே, அவர் செல்லுமிடந்தோறும் பேசி வருகிறார்.

இதன் விளைவு!

சைதாப்பேட்டையில் தோழர்கள் தாக்கப்பட்டனர்.

மவுண்ட் ரோடில், தி. மு. க. வினருக்கு பலத்த அடி—படுகாயம்.

மதுரையில், அரிவாள் வெட்டு — கத்திக் குத்து-பத்துபேர், படுக்கையில்.

'அவர்கள்' நோக்கம்

புலிகள் மோதிக் கொண்டால், இடையில் வழியும் இரத்தத்தைக் குடிக்க, காட்டு நரிகள் முயல்வதுண்டாம்—இப்போது நரிகள் காட்டில் மட்டுமல்ல; நாட்டிலும் உள்ளன! இவை, ஒரு பக்கம் அதிகாரத்தையும், மற்றோர் பக்கம் 'ஏமாந்த இனத்தவரை'யும் தூண்டி விடுகின்றன. இந்த மோதுதலின் விளைவாக, அரசியல் குட்டை குழம்புப்-அதிகார வேட்டையாடலாம்—என்று கனவு காண்கின்றன.

தி. மு. க. இலட்சியம்

காட்டு முறைபால், நாட்டைக் காடாக்கும் இழிசெயலை, தி. மு. க. ஒரு நாளும் ஏற்காது. இந்நாட்டில் வாழும், எல்லா மனிதர்களையும் அன்பு வழியில், பகுத்தறிவுப் பாதைக்கு அழைப்பதுதான் அதன் லட்சியமாகும். அந்த லட்சியத்துக்காகப் பாடுபட்ட நெல்லிக்குப்பம் மஜீது—வண்ணாரப்பேட்டை பாண்டியன் — உடையார்பாளையம் வேலாயுதம்—ஆகியோர் பிணமாக்கப்பட்டபோதும், 'ஐயோ! நாடே!!' என்று வருந்தினோமே தவிர, வேதனைப் பாதை, புகவில்லை, நாம்.

நம் கருத்து!

விவேக புரிக்கு, மக்களை, அழைத்துச் செல்வதுதான், அரசியல் முறையே யொழிய, 'தேனீ' நடத்துவதும், தடி தூக்கியோர் உலவுவதும், மிக மிக வெறுக்கப்படவேண்டிய செயலாகும்.

கண்ணியமும் கட்டுப்பாடும் நிரம்பிய நமது தோழர்களுக்கு, மேற்கண்ட அறிவுரையை வழங்கிச் சென்றிருக்கிறார், நம் பொதுச்செயலாளர். அதனை நெஞ்சிலிருத்தி, அடிக்க வந்தோரை எதிர்த்துத் தாக்காமல், வெட்டுக் காயங்களைத் தாங்கி, ரத்தம் சிந்திடபோதும், சித்தம் குலைந்து காட்டு முறை சென்றோரைத் தாக்காது, கடமைப் பொறுப்புடன் நடந்துகொண்ட நமது தோழர்களைப் பாராட்டுகிறோம். அவர்கள் உடலிலிருந்து ரத்தம் வழிந்தது எனும் செய்தி நமது இதயத்தில் ஈட்டியைப் பாய்ச்சியது போலிருந்தது! அவர்கள் மீது அடியும் — குத்தும் — வீழ்ந்ததென்பது, நம் உடம்பெல்லாம் தாக்கியது போலிருந்தது!! எனினும், இவைகளை இலட்சியக் காணிக்கைகளாக நினைப்போம். நம்மை மாற்றாரென மதித்து, 'சுயநலமி'கள் ஊட்டும் உற்சாகத்துக்கு இரையாகி, சொந்தச் சகோதரனையே சொந்தச் சகோதரன் தாக்குகிறான் எனும் துயரமான கட்டத்துக்கு நாடு வந்துவிட்டதே! என்பதை நினைக்கும்போது, மிகமிகப் பரிதாபப்படுகிறோம்.

காரணம் யார்?

காங்கிரஸ் தோழர்களிடம் இந்த நிலைமையை வளர்க்க விரும்புவோர் யார் என்பதைப் பற்றி, நாம் விளக்க வேண்டுவதில்லை. நாடு நன்கு அறியும். இந்த விபரீதம், மிகமிக வேதனையைத் தரும்! தி. மு. க. தலைவர்கள் சிறைக்குள் கிடக்கும் நேரம். இந்த நேரத்தில் இத்தகைய இழி முறைகளுக்கு வழி வகுப்போர் யாராயினும்—ஆதரவளிப்போர் யாராயினும் — அவர்கள், சமூக விரோதிகளாகும். சமூக விரோதிகள் சட்டத்துக்கு தப்பலாம்—சில வேளைகளில் பல காரணங்களால். ஆனால், மக்களின் கண்களிலிருந்து, தப்ப முடியாது. இதனையே, மீண்டும், காங்கிரஸ் தலைவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறோம். வேதனையை வளர்க்காதீர்! விளைவு, விபரீதமாகும்! நாடு, காடாகும்! நல்லதல்ல இப்போக்கு.

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரில் ஈடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 11—10—53 [ஞாயிறு

'இந்து'வுக்கு!

★

'பாக்கிஸ்தான்' தீர்மானம் உருவாவதற்கு ஓராண்டுக்கு முன்பே 'திராவிட நாடு' தீர்மானம் திருவாரூரில் நிறைவேறியது!

இழந்த வாழ்வைத் திரும்பப்பெற கங்கணம் கட்டிப் புறப்பட்ட திராவிடர் கூட்டம் நாடு பூராவும் சென்று திராவிட நாடு முழக்கத்தை எழுப்பி வந்தது. கிட்டத்தட்ட 14-ஆண்டுகள் மறைந்து விட்டன, 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று குரல் எழுப்ப ஆரம்பித்து!

இந்த 14 ஆண்டுகளில் திராவிட நாடு பிரச்சனையைக் கண்டு தேசியத் தோழர்கள் கிளப்பிய எதிரொலிகள் விதவிதமானவை.

நினைத்தாலே சிரிப்பு வரும். 'எலி வளை எலிகளுக்கே!'' என்று கிண்டல் செய்தது, மக்களை வெத்து வேடிக்கையில் ஈடுபடுத்தி, காலங் கடத்தும் 'ஆனந்த விகடன்'.

"திராவிடனாவது — நாடாவது! எல்லாம் சில நாஸ்திகர்கள் பித்தலாட்டம்'' என்றனர் வைதீகப் பாதையில் சென்று கொண்டிருந்த மஹா பக்தர்கள், சிலர்.

"பாரதமாதாவின் விலங்கை உடைக்கத் தலைவர்கள் தங்களையே அர்ப்பணம் செய்யும் இந்த நேரத்திலா இந்தஐந்தாம்படைக் கூச்சல்!'' என்றனர் தேசியத் தோழர்கள்.

கேலியையும் கிண்டலையும் கவனிக்கக்கூட நேரமின்றி, வாழ்ந்த இனத்தை, வாழ்விக்கவைக்கும் பெரும் பணியில் ஓய்வு காணாது உழைத்தனர், அறிவொளி தூக்கிப் புறப்பட்ட நம் தோழர்கள்.

அறிவொளியின் பிரகாசம் வளர வளரத் தேசியத் தோழர்கள் உண்டாக்கி வைத்திருந்த போலி விடுதலையின் சுயரூபம் மக்களுக்குத் தெரிய ஆரம்பித்தது. தன்னுணர்வு கொண்டனர். மறு மலர்ச்சி யடைந்தனர். புது வழி நடக்க ஆரம்பித்தனர்!

சமுதாயத்திலே முன்னேற்றம்; பொருளாதாரத்திலே சமத்துவம்; அரசியலிலே மக்களாட்சி! ஆரியமும், தேசியமும் உண்டாக்கிய தீச் சுழலிலிருந்து தப்பிய அந்த மாபெரும் ஊழியர்கள் கிளப்பிய இந்த வாழ்வுக் கொள்கைகள், சமுதாயத்தின் அடித் தளத்திலே அமுக்கி வைக்கப்பட்டிருந்த பஞ்சை, பராரிகள் மனதில் படிந்தன. அவர்கள் இன உணர்ச்சி கொண்டு விடுதலைக் கீதம் பாடிப் புறப்பட்டனர்.

மக்கள் விழிப்புற்று நேர்வழி நடப்பது கண்டு, ஆத்திரத்தை வாரிக் கொட்டினர். சந்தேகப் புயலை வீசினர்.

"திராவிட நாடு, திராவிட நாடு என்றால் அது எப்படித் தனித்தியங்க முடியும்?''

பதில் கூற முடியாத பெருங் கேள்வியை வீசினோம் என்று மகிழ்ந்தனர், தேசியத் தோழர்கள்.

"ஏன் இயங்க முடியாது? டென்மார்க் இல்லையா? ஜெர்மனி இல்லையா? பிரான்ஸ் இல்லையா?… ……'' என்று அடுக்கினர் ஆர்வத்தினால் மாத்திரமல்ல, அறிவின் துணை கொண்டு தங்கள் திட்டத்தை வெளியிட்ட தோழர்கள். தேசியத் தோழர்களால் பதில் கூற முடியவில்லை. கோபம் வந்தது. "இப்படிப் பிரிந்து போனால் அந்நிய நாட்டான் உங்களை ஆக்ரமித்து விடுவான்!'' என்று பூச்சாண்டி காட்டினர்.

"எங்களுக்கு இருக்கும் நீண்ட கடற்கரையும், திராவிட இனத்தின் போர் வல்லமையும் ஒருபுறமிருக்கட்டும். எங்கள் மேல் அவ்வ… அக்கரை யிருந்தால் எங்கள்நாட்… பாதுகாப்பிற்கு எங்களோடு உ… படிக்கை செய்துகொள். நாம்… வரும் தனித்தே வாழ்வோம். போ… காலத்தில் நான் உனக்கு உதவி… எனக்கு உதவி!'' என்று திரு… அழைத்தனர் திராவிடர்கள்.

தேசியத் தோழர்களுக்கு … வுமே திருப்தியாகப் படவி… காரணம் நாம் கூறுவதையே ஆ… சிக்க அவர்கள் விரும்பவில்லை.

காலிகள், கூலிகள் என்று … சொல் வீசி, தடிகொண்டு … அதிகாரம் கிடைத்தவு… துப்பாக்கி முனைகொண்டு இ… உரிமைப் போராட்டத்தை அட… விடப் பார்த்தனர்.

ஆனால் உள்ளத்திலிருந்து, … மையை அறிந்து உயர் நோக்… கொண்டு பிறந்த அந்த திராவி… கொள்கை அசைய மறுத்தது.

விழித்த மக்கள் தளரா நம்பிக்… யோடு வாழ வழி காட்டிய த… கள் பின்னே சென்றனர். … மார்பில் குண்டு பாய்ந்த போ… அவர்கள் அஞ்சினாரில்லை.

ஆனால், அதுகண்டு அரசா… அஞ்சிற்று. ஆச்சாரியார் அஞ்சி… காங்கிரஸ்காரர்கள் அத்… பேரும் அஞ்சினார்கள். ஆகவேதா… டில்லிக்குக் காவடி தூக்கி, … பதாண்டுகளாக தேசிய பத்தி… களால் சகஸ்ரநாமம் செய்யப்ப… அந்த 'ஆசிய ஜோதி'யைப் பே… அழைத்து வந்தனர்.

தென்னாடு நோக்கி வந்த … பண்டிதர், தான் படித்த … லாற்றை மறந்து விட்டு, வரலா… திருப்பிப் பாருங்கள் என்று … ஆரம்பித்துவிட்டார்.

"ஒரே தேசம்; ஒரே … ஒரே இனம்; இந்த நாடு உலக… லேயே மிகப் பெரிய நாடாக… ……"இப்படி அடுக்கிக் கொண்… போயிருக்கிறார் பண்டி… பண்டிதரின் வார்த்தைகள் நமக்… புதிதல்ல. வரலாற்றுச் சுவடி… ஆரம்ப முதல் இன்று வரை … சாம்ராஜ்யாதிபதிகள் அத்… பேரும் கூறியதுதான்; எண்ணி… தான். இந்த நூற்றாண்டிலே … வாழ் நாளிலேயே பார்த்த … லரும், முசோலினியும் …

சர்வாதிகாரிகள் கூறும் மந்திரம்தான் இந்த "ஒரே தேசம், இனம், மொழி" எல்லாம்.

போட்டிருக்கும் திட்டமெல்லாம் வடநாட்டின் வளர்ச்சிக்கும், வடவரின் முதலாளித்துவத்துக்கும் ஆக்கம் தருவதாக இருக்கும்போது தென்னாடு நோக்கி வந்த பண்டிதர், இங்கு வாழ்பவர்களுக்கு ஒன்றுபட்ட இந்தியாவின் வருங்காலப் படத்தையும், 'ஒரே தேசம்' என்ற பாசிசக் கொள்கையையும் கூறாமல் வேறெதைத்தான் கூறுவார்?

கோயமுத்தூரிலே புகை வண்டித் தொழிற்சாலையும், கும்பகோணத்திலே விவசாயக் கருவி உற்பத்திசாலையும், சேலத்திலே அணுகுண்டு ஆராய்ச்சி நிலையமும் உண்டாக்கி, ஆந்திராவில் மைக்கா தோண்டுவதற்கு குழுவும், நெய்வேலியில் நிலக்கரி தோண்ட கோடிக் கணக்கில் செலவு செய்த கருவிகளுமா தருவித்திருக்கிறார் நேரு? தென்னாட்டில் இதை, இதை செய்திருக்கிறது தேசிய சர்க்கார் என்று எதைக்கூற முடியும்? வடநாட்டிலே கட்டப் பெறும் ஒரு அணைக்கட்டின் நூறில் ஒரு பங்கு கூட இல்லாத பவானி சாகரும் மலம்புழா அணைக்கட்டுகளும் பொருளாதாரம் தெரிந்தவரின் கண் முன் ஏமாற்றக் கூடிய திட்டங்கள் அல்லவே. ஆகவேதான் தென்னாடு சுற்றிய நேரு திரும்ப, திரும்ப 'ஒன்றுபட்ட இந்தியா!" என்று கலைக்குதவாக் கோஷத்தை அள்ளித் தெளித்து விட்டுச் சென்றுவிட்டார்.

இந்த மாய வலையில் மக்களை வீழச் செய்வது, திராவிடத்தின் சரித்திரத்தைத் தாறுமாறாக்கும் தேசியப் பத்திரிக்கைகளின், வேலைகளில் முக்கியமானது.

அந்தப் பணியில் ஈடுபட்டு, திராவிடத்தில், ஆரியத்தைக் காக்கும் பெரும் பொறுப்பை ஏந்தி நிற்கும் மவுண்ட் ரோடு மகா விஷ்ணு 'இந்து' பத்திரிக்கை தனது முதல் தலையங்கத்தை எழுதியிருக்கிறது, சென்ற வாரம்.

ஜலண்டு மைதானத்திலே பண்டித நேரு 'என்னையும் தட்டிக் கேட்க ஆளிருக்கிறதா?' என்று தி.மு.க. வின் மீது தனக்கேற்பட்ட வயிற்றெரிச்சலை அள்ளிக் கொட்டிய, மறுநாளே, தன் தந்திரப் பேனா கொண்டு தலையங்கம் தீட்ட ஆரம்பித்துவிட்டது 'இந்து'.

"உலகத்திலே அமெரிக்காவும், ரஷ்யாவும், சீனாவும் இன்று வளம் பெற்று இருப்பதற்குக் காரணம், அந்தந்த நாட்டுமக்கள் இன மொழி வேறுபாடின்றி மத்திய அரசாங்கத்தின் பக்கத்தில் நின்றதுதான்.

ஆனால், அதே நேரத்தில் ஐரோப்பாவும், தென் அமெரிக்காவும் இன்று சீரழிந்து பெரிய நாடுகளுடைய அரசியல் ஆட்டக்காயாக இருப்பதின் காரணம், அந்தப் பூபாகத்தில் சிறிய, சிறிய நாடுகள் இருப்பதுதான்!" என்ற நகைப்பூட்டும் சித்திர வாதத்தைக் கூறி, ஆகவே நாமும் ஒன்றாகக்கூடி செயலாற்றாவிட்டால் நமது வருங்காலம் அழிந்துவிடும்! என்று நம்மைப் பயமுறுத்துகிறது. உலக வரலாற்றை உற்று நோக்கும் எவர்க்கும் நகைப்பை உண்டாக்கும் இந்த விசித்திர வாதம், ஹிந்துவும், அதன் டக்கம் நிற்போரும் எந்தளவு சர்வாதிகார மனப்பான்மையை அவர்கள் அடித்தளத்திலே வைத்திருக்கின்றனர் என்பதை நமக்கு நன்கு காண்பிக்கிறது.

மூன்று கோணங்களிலிருந்து 'ஹிந்து'வின் வாதத்தை நாம் ஆராய வேண்டும். அப்பொழுதுதான் அதன் சுயரூபம் நமக்குத் தெரியும்.

முதலில் அமெரிக்காவும், ரஷ்யாவும், சீனாவும் முன்னேறியது எதனால் என்பதைக் கவனிக்கவேண்டும். இதில் இரண்டு வழிகள் இருக்கின்றன.

ஒன்று, அமெரிக்கா முன்னேறிய முறை; பதினைந்தாவது நூற்றாண்டுக்குப் பின் மறுமலர்ச்சி யடைந்த ஐரோப்பாவின் பல பாகத்திலிருந்தும் பிழைப்பைத் தேடிப்புறப்பட்டுச் சென்ற மக்கள்தான் இன்று 18 கோடி ஆகி இருக்கும் அமெரிக்

'எறும்பு' வாழ்த்துகிறது!

★

ஒற்றுமைக்கும், உழைத்த பொருளைச் சேர்த்துவைத்து சிறப்பாக வாழ்வதற்கும், சுறுசுறுப்புக்கும் எறும்பை உதாரணமாகச் சொல்வார்கள்.

அத்தகைய எறும்புக் கூட்டமாம், நாம்!—ஆச்சாரியார், கூறுகிறார்!!

*

செய்நன்றி காட்டும் சிறப்பு, எறும்புக்கு உண்டென்பதை விளக்கப் பல கதைகள் உண்டு.

நீரில் மூழ்க இருந்த எறும்பை—கரையில் சேர்த்தது, ஒரு மணிப் புறா. அந்தப் புறாவை வீழ்த்த, வேடன் ஒருவன் அம்பேந்தி நின்றான். அப்போது, அவன் காலைக் கடித்து, குறி தவறவைத்து, புறாவைக் காப்பாற்றிற்றாம், எறும்பு.

*

அந்த எறும்பைக் கொல்வது எளிதுதான்! காலை வைத்துத் தேய்த்தால் போதும்—மனிதனை குண்டுமாரியால் சாகடிப்பது போல. ஆனால், எறும்புக்கும் இடையூறு செய்யக்கூடாது என்பது, ஜைன மதக் கோட்பாடு! ஜைன மதமோ—பார்ப்பனிய மதத்தை எதிர்த்து உருவாக்கப் பட்டது! பார்ப்பனிய மதமோ, உயிரோடு ஆடு மாடுகளை வெட்டி யாகம் நடத்தும் மதமாகும்! அந்த மதத்தின் 'உன்னத புருடர்' ஆச்சாரியார்—ஆகவேதான் 'தேய்த்துக் கொல்லுங்கள்' என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்—அகிம்சா மார்க்கர்! அண்ணல் காந்தியின் சம்பந்தி!!

*

மறைந்த சத்யமூர்த்தி, நீதிக் கட்சியை 'பூனை' என்றார்—'புலி'யாக உலவுவதைக் காணுமுன் போய்விட்டார்! அவரது அரசியல் எதிரி ஆச்சாரியார், இன்று நம்மை 'எறும்பு' என்கிறார்— 'எறும்பு'க் கூட்டம் ஒன்றாகி, 'சிங்கக்குரல்' எழுப்பும் சீரிய காட்சியைக் காணும்வரையாவது, இவர் வாழவேண்டும் என வாழ்த்துகிறோம்!

கர்கள். ஆகவேதான் அமெரிக்கா சென்ற எந்த ஐரோப்பியனும் தன் நாட்டைப் பற்றிக் கவலைப்படாமல் அமெரிக்கநாட்டிலே பிழைக்க வழி தேட உழைத்து அந்த நாட்டிலேயே செல்வத்தை உற்பத்தி செய்ய ஆரம்பித்தான். அந்த நாட்டை ஆக்ரமித்து, ஆண்ட பிரிட்டிஷ் ஆதிபத்யத்தை பதினெட்டாவது நூற்றாண்டில், குடியேறிய ஆங்கிலேயன்கூட அடித்துத் துரத்தினான். மேலும் அமெரிக்காவில் வாழ ஆரம்பித்த எந்த நாட்டுக்காரனும், அவன் ஸ்பெயின் தேசமானாலும் சரி, பிரஞ்சு ஆனாலும் சரி, ஜெர்மெனி, இங்கிலந்து எதுவானாலும், ஐரோப்பியன் என்ற ஒரே உணர்ச்சிதான் அவனுக்கிருந்தது. காரணம், மறுமலர்ச்சிக்குப் பிறகு மேற்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட விஞ்ஞான அறிவுப் புயல் தேசீய எல்லையைத் தாண்டி, ஐரோப்பிய கலாச்சாரத்தை உற்பத்தி செய்திருந்தது. ஐரோப்பாவில், வெவ்வேறு நாடுகள் தனித்த பண்பாட்டை வளர்த்த போதிலும், அங்கிருந்து வெளியேறியவர்கள் வட அமெரிக்காவிற்குச் சென்றவுடன் ஐரோப்பியர் என்ற ஒரே மனப்பான்மையில்—வெள்ளையன் நீக்ரோ போராட்டத்தில் ஈடுபட்டு ஒற்றுமையோடு நாட்டை வளர்க்க வேண்டியவர்களானார்கள்.

இதுதான் அமெரிக்காவின்பெரிய நிலப்பரப்பு ஒரேஆட்சியின்கீழிருப்பதற்குக்காரணம். அங்குஅவசியத்தினால் மத்தியஅரசாங்கம்வளர்ந்ததே ஒழிய, மக்கள் முன்னேற்றம் அதனால் ஏற்பட்டதல்ல! ரஷ்யாவும், சீனாவும் அமெரிக்காவினின்றும் வேறான வழியில் சென்று முன்னேறியவை. அதுதான்அறிவாராய்ச்சியில் ஈடுபட்டு மனித சமுதாயத்திற்கு சுபிட்சத்தைத் தரும் வழியைக் கண்டுபிடித்த கம்யூனிச வழி. “மக்களுக்காக நாடு! மக்களுக்காக செல்வம்! மக்களுக்காக அதிகாரம்!” என்று மக்களை (நாட்டை அல்ல) முன் நிறுத்திய சோஷலிச அரசாங்கத்தின் பின்னே சென்று, முன்னேறி யிருக்கின்றனர், ரஷ்யர்களும், சீனர்களும். கொள்கைக்காக மத்திய அரசாங்கமே தவிர மத்திய அரசாங்கத்துக்காகக் கொள்கையல்ல

டாடாக்களையும், பிர்லாக்களையும், ஆலை முதலாளியையும் ஜமீன்தார்களையும், மிட்டாக்களையும் வைதீகத்தையும்வைத்துக்கொண்டு அவர்கள் முன்னேறவில்லை.

“எங்களுக்கு கடவுள் நம்பிக்கையில்லை என்று பெருமைப்படக் கூறிக்கொள்கிறேன்!” என்று மார்தட்டிக் கூறினார் லெனின். ஆகவேதான் அறிவொளிபட்ட மக்கள் நம்பிக்கையோடு முன்னேறி இருக்கின்றனர். அதே நேரத்தில் அந்த கம்யூனிச நாடுகளில் தனித்தனி கலாச்சாரமுள்ள பகுதிகள் பிரிந்துபோக நினைத்தால், பிரிந்து போகலாம் என்ற உரிமை இருக்கிறது. மக்களிடமும் கொள்கையிடமும் நம்பிக்கை கொண்டுள்ளவர்கள் அங்கு இருக்கின்ற காரணத்தால் தான் முன்னேற்றம் வந்ததே தவிர வெறும்பெரியஎல்லைக்கோடு இருந்த காரணத்தால் மாத்திரமல்ல.

நாம் மேற்கண்ட உண்மைகளை வைத்துப்பார்த்தால் ஹிந்துவின் வாதத்தின் ஒருபகுதி அடிபட்டுப் போகும்.

இரண்டாவது பகுதி, அது கூறுகிறபடி மேற்கு ஐரோப்பிய நாடுகள் சிறிய நாடுகளாய் இருப்பதால் சீரழிந்து விட்டனவா?

இந்த நூற்றாண்டுவரை மனிதன் பெற்றிருக்கும் அத்தனை வளர்ச்சிக்கும் மேற்கு ஐரோப்பாதான் காரணம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. சிறிய, சிறிய நாடுகளாயிருந்தாலும் டென்மார்க், ஸ்காண்டிநேவியா, ப்ரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய நாடுகள் அழகுகலைகளுக்கும், அறிவுத் துறையிலும் செய்திருக்கும் சேவை எழுதி முடியாது. இன்று உண்டாக்கப்பட்டிருக்கும் விஞ்ஞான வசதிகள் அத்தனையும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் கண்டுபிடித்தவைதான். தத்துவ ரீதியாக அவர்கள்தான் இன்றைய அறிவுலகத்தின் உச்சியிலிருக்கின்றனர். சிறிய தேசங்களாய் இருப்பதால் அவர்கள் முன்னேற்றம் எதுவுமே தடைப்பட்டதில்லை. இயற்கை கொடுக்கும் தொல்லைகளையெல்லாம் மீறி, இன்று மிக உயர்ந்த கூட்டுறவுக் கொள்கையோடு, சராசரி அதிகமான ஆண்டுகள் வாழும் மக்களைக்கொண்ட நாடுகள் மேற்கு ஐரோப்பிய நாடுகள்.'

நாகரீகத்தின் சிகரத்திற்குச் சென்று கொண்டிருக்கும் மேற்கு ஐரோப்பிய நாடுகள், பெரிய நாடுகளுடைய அரசியல் ஆட்டக்காயாகி விட்டன என்று பயமுறுத்துகிறது ‘ஹிந்து’

இன்று உலகத்திலே சண்டை ஏற்படுவதற்கே காரணம் இந்த பெரிய நாடுகள் இருப்பதால்தான்; அமெரிக்காவிலும் ரஷ்யாவிலும் இருக்கும் சாதாரண மனிதனின் குரல் மத்திய அரசாங்கத்தின் அயல் நாட்டுக் கொள்கையை நிர்மாணிப்பவர்களின் காதில் போய் விழவும் முடிவதில்லை. விழுந்தாலும் தனக்கிருக்கும், அளவுக்கு மீறிய அதிகாரத்தாலும் செல்வாக்காலும் பெரிய எல்லைக் கோட்டுக்குள் பெருவாரியானமக்களைத் தன்பக்கம்சேர்த்துக் கொள்கிறான் அந்த நாடுகளின் அரசியல்வாதி! ஆகவேதான் பெரிய நாடுகள் துணிந்து போர் முரசம் கொட்டுகின்றன.

அதே நேரத்தில்மேற்கு ஐரோப்பிய நாடுகளின் நிலை என்ன?

ஒரு நாடாவது ‘போர்’ என்று வாயால் கூறக்கூட பயப்படுகிறது. காரணம், அங்கு இருக்கும் அயர்வு மாத்திரமல்ல; சிறிய சிறிய நாடுகளில் வளர்ச்சியடைந்த அறிவாளிகள் அதிகமிருக்கின்றனர். அவர்கள் கூறுவதை அரசாங்கம் அசட்டை செய்ய முடியாத நிலை. ஆகவேதான் பெரிய சக்திகளில் ஒன்றான பிரான்ஸ் கூட இன்றைக்கு அமெரிக்காவோடு சேர்ந்து போரில் ஈடுபட மறுக்கிறது. இங்கிலாந்திலே பிவானின் செல்வாக்கு, சர்ச்சிலைக் கூடப் பணிய வைக்கிறது.

இப்படி நிலைமைக்கு நேர்மாறான வாதத்தைக் கூறும் ‘ஹிந்து’வை சரித்திரத்தின் மற்றொரு ஏட்டையும் புரட்டிப் பார்க்கச் சொல்கிறோம்.

மேற்கு ஐரோப்பிய நாடுகள் சிறிது சிறிதாக இருக்கிறது என்று துக்கப் படுகிறதே, அந்த மேற்கு ஐரோப்பாவை ஒன்றுபடுத்த நினைத்த சீசர் முதல் இன்றுவரை வாழ்ந்தவர்கள் முயற்சி தோற்றதேன்? நெப்போலியன் ‘ஒன்றுபட்ட ஐரோப்பா!’ என்று கத்திய வண்ணம் தன் வாழ்நாள் பூராவும் போராடினான்.

ஹிட்லர், ஒன்றுபட்ட ஐரோப்பா!” என்றுதான் பெரும் போர் புரிந்தான்.

ஆனால், எல்லோரும் முயன்றும் தோற்றதேன்? இங்குதான் இருபதாம் நூற்றாண்டின் பேரறிஞன், வரலாற்று ஆசிரியர் வெல்ஸ் கூறியதை நாம் கவனிக்கவேண்டும்.

நெப்போலியன் தோற்கடிக்கப்பட்ட பிறகு வியன்னாவில் கூடிய ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் மாநாடு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. மறைந்துபோன மாபெரும் ஐரோப்பிய சாம்ராஜ்யங்களை நிறுவி, ஐரோப்பிய எல்லைக் கோட்டையே மாற்றியமைத்துவிட எண்ணினர், அங்கு கூடிய அரசபரம்பரையினர்.

ஆனால், அவர் முயன்றது எதுவும் நடக்கவில்லை. 1914—18 பெரும்போர்தான் ஏற்பட்டது. இந்த வரலாற்றுப் பகுதியை விளக்கும்போதுதான், வெல்ஸ் கூறுகிறார்; "முற்றிலும் வெவ்வேறான கலாச்சாரத்தையும் மொழியையும் பேசும் பல்வேறு இனமான ஐரோப்பிய மக்களை ஒன்றுசேர்க்க நினைத்தது நடக்காத காரியம் என்பது வியன்னாவில் கூடியவர்கள் மறந்துவிட்டனர். இந்த மாதிரி கனவுகள் சரித்திரம் பூராவும் முயன்று முடியாமல்போனதை, நாம் நினைவிற்குக் கொண்டுவர வேண்டும்!" என்று.

இதையேதான் நாமும் இந்துவுக்குக் கூறுகிறோம். அசோகன் காலமுதல் முயன்று முடியாமற் போன விஷயம், ஒன்றுபட்ட இந்தியா!

பல்வேறு கலாச்சாரங்கள், இனங்கள், மொழிகள் கொண்டது, இந்தியா. அதுவும் ஒவ்வொரு இனமும் நாகரிகத்தின் பாதையிலே சேர்ந்து பிரயாணம் செய்யவில்லை.

வட இந்தியர் இன்னும் வைதீகப் பிடியிலிருந்து விடுபடவில்லை. நாகரிக உணர்ச்சியின்றி, பழைய சாம்ராஜ்ய எண்ணங்களில், முதலாளித்துவ வழியில் செல்கின்றனர். மேலும், அதிகாரத்தின் பிடியைத் தங்கள் கையில் வைத்துக்கொண்டு, தென்னாட்டையே அடிமைப்படுத்தும் வேலையில் அவர்களை அறியாமலேயே ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்த நேரத்திலே, வடநாட்டில் வளரும் பாசிச ஆட்சியையும், அவர்களுடைய முதலாளித்துவப் போக்கையும், மொழி ஆதிபத்திய எண்ணத்தையும் எடுத்துக் கூறினால், தி. மு. க.வின்மேல் இந்துவுக்குக் கோபம் வருகிறது. குதர்க்கம் பேசி, சொல்லம்பை வீசுகிறது.

பூத்து வரும் ஒன்றுபட்ட இந்தியாவில், கூடவே முதலாளித்துவ நச்சரவமும் வளர்கிறது. அது தரப்போகும் பேராபத்தைத் தடுக்க வேண்டுமானால், திராவிடம் பிரிக்கப்பட வேண்டும். இந்தியா துண்டாடப்பட்டால், சிறிய தேசங்களாகும். அப்பொழுது, டாடாக்களும் பிர்லாக்களும் உண்டாகமுடியாது. சிறிய தேசத்தில், சிறிய முதலாளிதான் தோன்றமுடியும் — காலனி நாடுகள் நமக்கு இல்லாத காரணத்தால்.

இனம், மொழி, கலாச்சாரத்தால் திராவிடம் வேறுபட்டது என்ற அடிப்படைக் காரணங்களோடு, இந்தக் காரணமும் இன்று நம்மை திராவிடத்தைப் பிரிக்கும் வேலையில் ஊக்கத்தோடு ஈடுபடச் செய்கிறது.

இப்படியெல்லாம், சரித்திரம் சரியான வழியில் செல்வது 'இந்து'வுக்குப் பிடிக்கவில்லை.

'எங்க எஜமான் வீடு கட்டுகிறார்' என்று பரதவித்த வாழ்க்கை நடத்தும் பரந்தாமன், மகிழ்ச்சியோடு கூறினால், அது வேலைக்காரர்களின் பொதுவான எண்ணம் என்போம். அதேமாதிரி வடநாடு செழித்தால் 'ஒன்றுபட்ட இந்தியாவிற்கே பெயர் வரும்; புகழ் வரும்' என்றெல்லாம் ஆசை கூறி, ஆகவே டெல்லியின் ஆதிபத்தியத்திற்கு நீங்களும் கட்டுப்படுங்கள் என்கிறது 'இந்து'.

வடநாடு வாழ்ந்தால், அது நமக்கும் பெருமைதான் என்று தந்திரமாகக் கூறுகிறது. அப்படிக்கில்லாமல், இந்தியா துண்டாடப்பட்டால் நமது வருங்காலம் அழிந்துவிடும் என்கிறது.

இந்தப் பூச்சாண்டி பயமுறுத்தலுக்கு ஒரே பதில்தான் நாம் தர முடியும். அதுதான்,

"எனக்கு வேண்டியது சுதந்திரம். அதைக் கொடு. சுவர்க்கமே எனது சிறையாக அமைந்தாலும், அதன் உயர்ந்த சுவர்களைத் தாண்டிக் குதிக்கவே விரும்புவேன்" என்று ஜான் டிரைடன் கூறிய உன்னத மொழி.

★

நமது பொறுப்பு

இப்போது பண்டிதநேரு சென்னைக்கு வந்துபோனது நமக்கெல்லாம் ஒரு எச்சரிக்கை செய்வது போல் இருக்கிறது. அதாவது, "திராவிடப் பெருங்குடி மக்களே! நீங்கள் சாதாரண சல சலப்புக்கெல்லாம் அஞ்சாதவர்கள் என்பது எனக்குத் தெரியும் — நான் சரித்திரம் படித்தவன்—உங்களை யாராவது அவதூறாகப் பேசினால்கூட நீங்கள், உங்களுக்கிருக்கும் இயற்கையான சிறந்த பண்பாட்டின் காரணமாக அத்தகையவர்கள்மீது சினம் கொள்வதில்லை—தீமை செய்தவனுக்கும் நன்மையே செய்பவர்கள்—எனவே, யாராவது, உங்களை, முட்டாள்கள்—அறிவிலிகள்—நாகரிகமற்றவர்கள் என்று திட்டினால், அப்படித் திட்டுபவர்கள், தங்களைத் தாங்களே திட்டிக்கொள்கின்றனர் என்று எண்ணுபவர்கள்" என்பதை நினைவுபடுத்தி விட்டுப் போயிருக்கிறார்.

எனவே, ஆச்சாரியாரின் அகராதிப்படி காங்கிரஸ்காரர்கள் 'பொதுநல' வாதிகள்—நாம் (தி. மு. க.) 'சுயநல' வாதிகளாயிற்றே! பொதுநலவாதிகளான காங்கிரஸ் தோழர்கள் மேற்படி பொதுநலத்துக்காக இப்பொழுது ஆரம்பித்திருக்கும் கத்திக்குத்து, தடியடி போன்ற 'சிறந்த' செயல்களில், சுயநலத்தில் அக்கறை கொண்ட நாமும், அதாவது பொதுமக்களின் எதிர்கால நல்வாழ்வைக் கருத்தில் இருத்தி, இறங்கிவிடக்கூடாது என்பதை நம்முடைய தோழர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் மறந்துவிடக்கூடாது — தலைவர்கள் உள்ளே—நாம் வெளியே. இந்த நேரத்தில்தான் கண்ணியம், கட்டுப்பாடு, அமைதி ஆகிய நற்பண்புகளை நாம் அவசியம் கடைப்பிடித்தாக வேண்டும். தாக்குபவனைத் திருப்பித்தாக்குவது—வேண்டாம்—அதுவும் இந்த நிலையில் ஒரு சிறிதும் அந்த எண்ணம் எழவே கூடாது. இதனைச் சிந்தனையில் வைத்து நடந்து கொள்ள வேண்டுகிறோம்.

இது நமது பொறுப்பு—கடமை.

★

அக்கிரகாரத்தில்.

“சந்து மாமா! கேட்டயளோ, விஷயம்? நேருஜீ, வெளுத்துவாங்கி விட்டார்!”

“எங்கேடா, சீமாச்சு?”

“ஐலண்டு கிரவுண்டு, மீட்டிங் கிலே மாமா!”

“யாரையடா, வெளுத்துக் கட்டினார்?”

“அதான்—தமிழ்நாடு காங்கிரஸ் ராஷ்டிரபதின்னு சொல்லிண்டு, நம்ம ராஜாஜியை மிரட்டித் திரியிராரே, இந்தக் காமராஜ நாடார், அவரை........”

“அப்படியா! சபாஷ்...என்னடா சொன்னார்? நேரு, ரொம்பப் புத்தி சாலியாச்சே!”

“ஊம்—இனம், இனத்தை தானேடா, சேரும்? பசு—எருமையைப் பராமரிக்குமோ! அதுசரி—விஷயத்தைச் சொல். நேக்கு, கேட்கணும்னு, மனசு, துடிக்குது.”

இவாளெல்லாம், நம்ப ராஜாஜி மந்திரியாயிருந்தா, நம்மளவாளுக்கு சவுகரியம் செஞ்சு தரார்—ராஜ்யம் நம்மவா, மயமாகிறது—அப்படி இப்படின்னு சொல்லிண்டு ஒன்னு கூடி அவரை விலக்கப் பார்த்தாளேன்னே......?

“ஆமாம் நன்னாத் தெரியுட!!”

“அதுக்கு, சரியான சூடு, கொடுத்தார்!”

“என்ன, சூடு...”

“ஏய் நீங்களெல்லாம், முட்டாப் பசங்க. உங்களுக்கு, இவரோட, அருமை தெரியுமா. அடடா! எவ்வளவு பெரியமேதை, இவரு, இங்கே இருக்கிற ஒரேயொரு புத்தி சாலி, இவருதான் ...”

“ஒரேஒரு-ன்னு, சொன்னாரா? நேக்கு அப்பவே தெரியும். இப்படியேதாவது சொல்வாரென்னு.

“அழுத்தம் திருத்தமா, சொன்னார்......”

“இங்கிலீஷிலேதானே!”

“அப்புறம், இவாபாஷையிலே சொல்வாளோ?-அதுவும் நேருஜீ!”

*

காங்கிரஸ் கட்டிடத்தில்

“என் உடம்பு பூராவும் பற்றி எரிந்தச்சு, அண்ணாச்சி! சேச்சே—நாம்ப எவ்வளவுதான் உழைச்சாலும், நன்றி யில்லாத கூட்டம் தெரியாமலா இந்த திராவிடத்தார், சொல்றாங்க...... வடநாட்டுப் புத்தின்னு!”

“சப்தம் போட்டுப் பேசாதே!”

“போங்க, அண்ணாச்சி — உங்க ராஜ தந்திரமும் நீங்களும். ஒரே வார்த்தையிலே, தூக்கி யெறிஞ்சுட்டான், அந்த மனுசன் — செச்சே! நாளைக்கு, பாருங்க — தேனும் பேட்டை மகாநாட்டிலே......”

“இந்தாப்பா, தம்பி, ஏகாம்பரம்-இப்படி எல்லாம் ஒண்ணும் செஞ்சுடாதே!”

“போங்க அண்ணாச்சி! இவங்க மானத்தைக்காப்பாத்திறத்துக்காக, மவுண்ட் ரோடிலே நின்னு, வேகாத வெய்யிலிலே, கதர்க் கொடியைப் பிடிச்சுகிட்டு நான் பட்ட கஷ்டம் எனக்கில்லே தெரியும் — அதிலே, அநாவசியமா, தி. மு. க. கிட்ட வேறெ எனக்குக் கெட்டபேரு!!’

“அதனாலே, என்ன?”

“என்னவா? எத்தனை பேரு, அவுங்கள்லே, எனக்குத் தெரிஞ்சவங்க தெரியுமா—அண்ணன், தம்பியாட்டமா, பழகுகிறவங்க-ரொம்ப நல்லவங்க! அவுங்களையெல்லாம் விரோதிச்சிட்டு, நான்தானே, கதர் கொடி பிடிச்சேன். எதுக்கு பிடிச்சேன்?”

“காங்கிரஸ் பலத்தைக் காட்ட..”

“ஆமாம்! அதனாலேதான், ஆயிரம் ரூபாய், செலவழிக்க நேர்ந்ததாக்கும்......எல்லாம் இந்த நேரு மானத்தை காப்பாற்ற!”

“இப்ப, என்ன மோசமா போச்சு?”

“மானம்! அண்ணாச்சி மானம்! உங்க மானம்!! நான் இப்படி கஷ்டப்பட்டு கதர்க் கொடி பிடிச்சேனே தவிர, ‘கல்கி’யா வந்தான், இல்லே, கனஜோராப் பேசற ‘கிராமணி’ தான் வந்தாரா...... ஊம்! உங்க முகத்துக்காக நாங்கயிருக்கிறோம், அவன்க, என்னடான்னா, உங்களை, அல்பமா நினைக்கிறாங்க!’

*

‘கல்கி’ ஆபீஸ்

“அசடே! நேரு அப்படிப் பேசியிருக்கப்படாதுடா, கல்கி......”

“ஏன் அப்படிச் சொல்றேள்!’

“என்னைப் பாராட்டி எழுதத் தான் தெரிஞ்சுண்டிருக்கே-இதில இருக்கிற சூக்ஷமம் புரியலையே!”

“தெரியலே, நேக்கு......”

‘இவா—அதாண்டா—இந்த அண்ணாதுரை கூட்டம், என்னைப் பத்தி என்ன சொல்றது?”

“சுயநலமி! சூதுக்காரர்!ஜனநாயக விரோதி......”

“ஏய்! ஏய்!!—நிறுத்து--போதும்......இதை நான் கேட்கலே...நான் எப்படி மந்திரியா வந்தேன்னு சொல்றான்க?”

“ஓ! அதுவா? டில்லி தயவுன்னு சொல்றாங்க!”

“சொல்றான்கல்லே— பண்டித நேரு யாரு?”

“டில்லிக்காரரு”

“இப்ப, என்ன புரியுது?”

“ஒண்ணும் புரியலையே!”

“நோக்கு, ஒண்ணும் புரியாது! டில்லியும் நம்பளவாளும் சேர்ந்துகிட்டு, சூத்ராளை ஒழிக்கச் சதிசெய்றோம்னு...”

“நிஜம்தானே, அது?”

“சரிதான், நீயே போதும்போலிருக்கே!”

“சொல்லுவா! சொல்லுவா!!”

“அதனாலேதான் சொன்னேன்-நேருவுக்கு இன்னும் அவசரம் போகலேன்னு!”

“ஆமாம், ஆமாம்! அவர், இந்த தி. மு. க.வைப்பத்தி கன்னபின்னுன்னுபேசஆரம்பிச்சாரே—அப்ப நானும், நெனச்சேன்...”

“ஊம்...அப்ப நான் தலையிடலேன்னா, என்ன ஆகும்?”

“உங்க தலைக்கு பேரிடி வரும்!”

“ஒரு நாளைக்கே, ஆறு பேரை சாகடிச்சி —ஆயிரக்கணக்கான பேரை ஜெயிலிலே போட்டது போதாது!”

“அவன்க, புற்றீசல்போலே,புறப்பட்டுடுவான்களே!”

“ஆனா, ஒன்னு! அவன்க, தலைவர்கள், வெளியிலே யில்லீல்லே...”

“அது, கொஞ்சம் நிம்மதிதான் நமக்கு”

★ "உங்கள் பதில் என்ன?" ★

"என்னருந்தோழர்களே! இலட்
புதினத்தவரே! இதோ, என்னைக்
ணுங்கள். இழிசொல் மாலை,
ன் கழுத்தில்! சிரத்திலே, மாற்றார்
ட்டிடும், ஏளனமும்பழியும்! நான்,
ருக்கும், கோலத்தைக் காணீர்.
நான், நாசக்கூட்டமாய்! நயவஞ்ச
ப்பரம்பரையாம்! பித்தனும்! பிதற்
கிறேனும்! என், ஆசை பகற் கன
ம்—இவ்வளவு வசை மொழியும்
ன், எனக்கு அளிக்கிறார்கள் தெரி
மா?
நான் உங்கள் உரிமைக்காக—
நாடு-பெறுவதற்காகப் போராடு
றேன், என்பதற்காகத்தான். நமது
னத்தின் உரிமையைக் கேட்கிறேன்
கி ஒளி வீசும் உன்னதமான
டமைக்கப் பாடுபடுகிறேன், அது
ற்றமாம்! குதர்க்கமாம்!!
நல்லோரே —நாடாண்டோரே!
லுங்கள்—நான் செய்தது குற்
மா? உரிமையைக் கேட்பது குற்
மா? வாழ்ந்து வீழ்ந்தோர், வாழ
னைவது குற்றமா? கூறுங்கள், நான்
க்கப்படுவது, யார் பொருட்டு?
ன் பொருட்டா எனக்கிந்தக் கஷ்
? உங்கள் பொருட்டு' உண்மை
உரிமைக்கு உழைக்கிறேன்
பதன் பொருட்டு! — உங்கள்,
லென்ன? உரிமைக்காகப் போரி
சுதந்திரம், அவர்களின் சொந்
சொத்தா? இந்த பண்ணுக்கு,
ர்கள்தான், எஜமானர்கள்!

கூறுங்கள், நமது கோரிக்கை அர்த்தமற்றதா, அநியாயமானதா, அடைய முடியாததா! பழம் பெருமைகளை நினையுங்கள் —பாராளும் கூட்டம் என்பதையும் உணருங்கள் இன்று பரதவித்து நிற்கும் காட்சியையும் சிந்தியுங்கள். சீர்தூக்கிப் பாருங்கள். செப்புங்கள், உம் தீர்ப்பை! அவர்கள் முப்பதுகோடி—நாமோ பத்துகோடி. அவர்களிடமோ, ஒரு உலகஜோதி. உங்களிடமோ, கண்டனத்துக்குரிய; நான் உங்கள் பதில் என்ன"

*

பதிலா வரும்? வெற்றி, அவரை, நாடி வந்தது!

மாற்றாரின் மன எரிச்சலால் தாக்குண்டு கிடந்த, அவரது இனத்தவர் தலைவன் குரல்கேட்டு, தளைவிடுபட்ட புலிகளாயினர்—'பாகிஸ்தான் ஜிந்தாபாத்!' எனும் முழக்கம், அண்டமதிரக்கிளம்பிற்று! "ஏகாதிபத்தியதாசன்"—"மதவெறியன்"—"முட்டுக்கட்டை"— "மூர்க்கன்"- இந்த, இழிச்சொற்கள், அவரை நோக்கி, வீசப்பட்ட, காலம் மலையேறிற்று! எந்த ஏடுகள், அவரது புகழை மறைக்கும், மேகங்களாக விளங்கினவோ, அவை அவர் தம் படம்போட்டு, பாராட்டு பளவுக்கு நிலைமை வளர்ந்தது ஓங்கி வளர்ந்த கட்சி—உயர்ந்த நோக்கம்கொண்ட கட்சி—என்று போற்றிப் புகழப்பட்ட காங்கிரஸ்தலைவர்கள், பம்பாயிலுள்ள 'மலபார்ஹில்லை' நோக்கி பயணிவரலாயினர்! அவரோ, ஆடை நலங்காமல், அவர்களைப் பார்த்துச் சிரித்தார்!! அவர்கள் சினந்தபோதும் சிரித்தார்—வேறு வழியில்லையென வீடுநோக்கி வந்தபோதும் சிரித்தார்—சிரித்தபடியே, வெற்றியும் பெற்றார்—அவர் சித்தரித்த பாகிஸ்தானம், இதோ, பக்கத்திலிருந்தபடி 'இக்பால்' இசைத்த பண் பாடிக் கிடக்கிறது! அவரோ, மக்களின் இதயங்களிலே, மலர்ச்சியையும் மகிழ்ச்சியையும் தூவிவிட்டு, மண்ணுக்கடியில் கிடக்கிறார். அவர், புகழோ, மங்கவில்லை! ஒளிவீசியபடியே இருக்கிறது!!

*

காயிதே அஃலம் முகம்மதலி ஜின்னா அவர்களின் கல்லறையை, அண்மையில் கராச்சி சென்றிருந்த பண்டித நேரு கண்டாராம். இந்தச் செய்தியை ஏடுகளில் படித்தபோது மகிழ்ந்தோம். கல்லறையைக் கண்டபோது, பண்டிதரின் மனதில்; பற்பல தோன்றுமலா இருந்திருக்கும்! அப்பப்ப—அந்த மாவீரனின் கோரிக்கையைக் கேட்டபோது, கடல்மடை திறந்தாற்போல் கர்ஜித்தவரன்றோ, பண்டிதர்?—'ஏது பாகிஸ்தான்?'—'இவர் யார் கேட்க?' 'ஐயோ, நடுக்குமே?' — பசுவைத் துண்டாடுவதன்றோ அது?—'பாரத

4-ம் பக்கத் தொடர்ச்சி

முடிவு எப்படியாகும் என்பதை
றிக்கத் தேவையில்லை.
ஆகவே, இந்த மிரட்டலுக்கும்
ட்டலுக்கும் உரிமை முழக்கம்
ழுப்புவோர், ஒருக்காலும் பணிந்
ல்லை.
இதனை உணரத் தவறுவர், வெறி
ள்—சகஜமே. உரத்து முழக்க
வர்—சகஜமே. ஊதாரித்தன
ப் பேசுவர்-சகஜமே. எனவே,
ர்களைக் காணும்போது,
ப்புதான் வருகிறது நமக்கு!
சென்னை வந்தார், நேரு சீர்
ந்து திரும்பினார்!!
அவரது அரசியல் வாழ்வுக்கு,
ர் வீசிய சொற்கள், களங்
த உண்டாக்கிவிட்டன.

கண்ணியத்தின் காவலர்களை இழிமொழியால் அர்ச்சித்தார்—இழிநிலை பெற்றார்.

உள்ளத்து ஆத்திரத்தைக் கக்கினார்—உன்மத்தரானார்.

அரசுப் பொறுப்பை இழந்தார்—அநாகரீகக் கிரீடத்தைச் சூடிக்கொண்டார்.

அதுமட்டுமல்ல — முக்கியமான ஒரு விஷயத்தையும் உணர்த்திவிட்டார். அதுதான்:—

'தென்னாட்டாரே!

நீங்கள் எது செய்தாலும் எமக்குக் கவலையில்லை. கைகட்டி நிற்கும் வரையில்தான் ஆடலும் பாடலும். கோரிக்கைகளும் தீர்மானங்களும் அனுப்பினால், கவனிப்பதல்ல எம் பொறுப்பு. மாறாக, கண்டிப்பேன்—கடுமையான நடவடிக்கை எடுக்கத் தூண்டுவேன்"

இதனை உணர்த்திவிட்டார்—இதன்மூலம் தான் போர்த்திவந்த பசுத்தோலை நீக்கிவிட்டார்.

எனவே, தியாகி நேரு இல்லை—இன்று.

ஆதிக்க வெறியர், காட்சியளிக்கிறார்.

அவருக்கு நமது அனுதாபங்களைக் கூறுவோம்.

அகில உலக ஜோதி, அழுகல் குட்டையில் குதித்து, அநாகரிகச் சேற்றை பூசிக்கொண்டுவிட்டது.

பரிதாபமானதுதான்— என்ன செய்வது? ஆதிக்க வெறியாச்சே! அப்படித்தான் ஆட்டிப் படைக்கும்!!

மாதாவை வெட்டுவதாமே!'—இது போல, என்னென்ன ஏசல் மொழிகள் எடுத்தெறியப்பட்டன, அன்று. இன்றோ, அந்தப் பாகிஸ்தானத்தின் பிரதமர், டில்லி வருகிறார்! இந்துஸ்தானத்தின் முதலமைச்சர் எதிர்கொண்டழைக்கிறார்! ராணுவ மரியாதை—ராஜாங்க உபசாரம்—நல்வரவேற்பு—எல்லாம் நடத்தப்படுகிறது! பாகிஸ்தானத்தை எதிர்த்து, இன்றும் இழிசொல் வீசும் இந்து மகா சபையினரைக் கண்டிக்கும் வக்கீலாகிறார், சில சமயங்களில்!

*

திட்டினர், அன்று — திட்டிக் காட்டப்பட்டுவிட்டது, பாகிஸ்தானம்.

இதனைக் கண்ணாரக் காணும் காங்கிரஸ் தலைவர், சென்னை வந்து சென்றபோது செப்பினாராம், 'நாட்டுப் பிரிவினை, ஆகாது—கூடாது; ஐக்கியமே, துயர் தீர்க்கும் மருந்து' என்று. பண்டிதர் பகர்ந்த இவ்வுரை கேட்டு, ஆச்சரியமடையவில்லை, நாம். ஏனெனில், ஜின்னா பாகிஸ்தான் கேட்டபோது பாடப்பட்ட பல்லவிதான், அது! அதனையே, இன்று ராகம் மாற்றிப் பாடுகிறார்—அன்று 'முஸ்லீம்' என்று அவர்கள்மீது பழி சுமத்தப்பட்டது. இன்றோ, 'ஐயோ! நாமெல்லாம் இந்துக்களன்றோ!' என்று ஆசைமொழி பேசி, பழி வீசப்படுகிறது. மோகனம்! முகாரி!—இரு ராகமும் வேறென்றாலும், இசைக்கப்படும் பாடல், ஒன்றுதான். இதனை, உணர்வோம், நாம். எனவே பண்டிதர் கூறும், பழிச் சொற்களையும், இழிமொழிகளையும் கண்டு—நகைப்பு வருகிறது, நமக்கு. ஏனெனில், இந்த இழிவும் பழியும், நாம் எதிர்பாராததல்ல! புதிய நாடு காணும் எவருக்கும் இவ்வித ஏச்சும் பேச்சும் கிட்டாமல் போகாது. இந்நாள்வரை, நமக்கு, அது கிட்டவில்லை! ஏனெனில், நம்முடைய கோரிக்கையின் அளவையும் வலிவையும், வெளிப்படுத்தவும், அவர்கள் அஞ்சினர்—அதனால் தேசியத் தலைவர்களும் அவர்தம் ஏடுகளும், 'இரும்புத் திரை' போட்டுவந்தனர். எனினும், திரைகிழித்து, முழுமதியென ஒளி வீசுகிறது, நம் கொள்கை! ஒருநாள் —ஜூலை 15-அன்று சிந்திய இரத்தம், அடுக்கப்பட்ட பிணங்கள், சிறைக்குள் சென்ற தியாக வீரர்களின் அரும்பணி, செவிட்டுக் காதினராகயிருந்தோரின் சிந்தையைக் கிளறிவிட்டுவிட்டது. அகில உலகிலும், அந்த ஒளி, வீசுகிறது—முழுமதி, யெனக் காட்சி அளிக்கிறது. முழுமதியைக் காணும், 'கன்னக் கோலேந்தி' காரசாரமாகச் சீறிவிழுவதும், சினம் கொள்வதும், சகஜம் தான்! ஆகவே, பண்டிதரின், பதட்டம் காணப் பரவசமேற்படுகிறது, நமக்கு. பதட்டத்தின் விளைவாகவே இங்குள்ள காங்கிரஸ்காரர்கள், அவரை இங்கு அழைத்துவந்து, பவனிவரச் செய்திருக்கின்றனர்! இது, சாதாரண, செயலா? இன்றுவரை, இவ்வளவு வெளிப்படையாக, நேரிட்டிருக்கிறதா!!

ஆந்திர மாகாண ஆரம்பம்—அதைக் கண்டபோதும், பண்டிதருக்கு, நமது நினைப்புதான். அதனாலேயே, அங்கு பேசும்போதும், 'பிரிவினை கூடாது' என்று, சங்கநாதம் செய்திருக்கிறார்.

சென்னை பொதுக் கூட்டம்—இந்திய ஒற்றுமை குறித்து, இங்கும், பேசத்தவறவில்லை—ஏசவும் தயங்கவில்லை, நம்மை நோக்கி.

மதுரை! கோவை!—அங்கும், இதே நினைவுதான்—'இந்தியர் என்பதை மறந்துவிடாதீர்' எனும் பழைய பல்லவிதான்.

பண்டிதரின் கனவிலும் நினைவிலும், 'நாம்' இருக்கிறோம்—நம்மை அலட்சியப்படுத்திய அவர், இன்று கலங்குகிறார். இதனை, அவரது, விஜயம் நன்கு எடுத்துக் காட்டிவிட்டது. அவரை அழைத்துவந்து, தமது, கலக்கத்தைப் போக்கிக் கொள்ள நினைத்தனர், காங்கிரஸ் தோழர்கள். ஆனால் அவரோ, தன்னுடைய கலக்கத்தை, வெளியிட்டுச் சென்றிருக்கிறார்.

"தனி நாடு கோரிக்கை கூடாது!"—இந்தப் பல்லவியை, இப்போதல்ல, நாம் முதன் முதலாகக் கேட்பது, ஆரம்பமுதல், அவர்கள் சொல்லி வருகின்றனர். எனவே, இது குறித்து, நாம் ஆச்சரியப்படவில்லை—இவ்விதம் அவர் கூறாமல் சென்றிருப்பின், அதுதான், ஆச்சரியத்துக்குரியது. ஆனால், இவ்விதம், 'கூடாது' என்பதற்கு இதுவரை அவர்கள் காட்டிவந்த காரணம், 'இந்தியா முழுமையும் ஒன்றே! எல்லோரும் இந்திய மக்களே!' என்பதுதான். ஆனால், இம்முறை, பண்டிதர், வேறு சில விளக்கங்களையும் தந்து, 'இது ஆகாது' என்று கூறிச் சென்றிருக்கிறார். அந்த விளக்கங்களையே, நாம், உற்று நோக்கவேண்டியவர்களானோம்.

ஆந்திர மாகாண ஆரம்ப நாளில் கர்னூலில் பேசும்போது, தன்னுடைய அச்சத்தை வெளியிட்டிருக்கிறார்—தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்—"இவ்விதம் மொழிவழியாகப் பிரிவதே, ஐக்கியத்துக்கு ஆபத்து; எனினும், ஏற்கவேண்டியவர்களானோம். இந்த ஐக்கியம், குன்றாமல், இனிப் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்பதாக. இதனை வலியுறுத்திக் கூறவேண்டிய அளவுக்கு, அச்சம், அரசோச்சுகிறது, அவருள்ளத்தில். அவ்விதம், கூறிய அவர், இவ்விதம் 'தனித்தனி மாகாணங்களாகப் பிரிவதைக் குறித்து, புது விளக்கம் ஒன்றும் தந்துள்ளார். பண்டிதர் மேதை—அறிவாளி — அகில உலகிலும் ஜோதி வீசுகிறது. அவர், தெரிவித்திருக்கிறார்—"தனித்தனி மாகாணப் பிரிவினைகள் கோருகிறார்கள்; இது ஏகாதிபத்திய ஆசையால் ஏற்படுவதாகும். இந்த ஏகாதிபத்திய ஆசையை விட்டுவிடவேண்டும்" என்பதாக.

தனிநாடு கேட்பது, ஒருவகை ஏகாதிபத்யமாம்! வேவல் துரையும் வெலிங்டன் கவர்னரும், வெளியிடாத விளக்கம்—நமது விற்பன்னர் வெளியிடுகிறார்!!

ஏகாதிபத்தியம்!—இந்தச் சொல்லின் பொருளை மக்கள் உணர்வர்—ஆனால், பண்டிதர், அந்தச் சொல்லுக்குப் புது அர்த்தம் தருகிறார்! தனிநாடு—கேட்பது, ஏகாதிபத்யமாம். நேரு, அரசியல் தலைவர்! அரசியல் தலைவர்கள், மக்களைப்பார்த்து, 'ஏ! ஏகாதிபத்யக்காரர்களே!' யென்று இதுவரை, அழைத்ததில்லை—ஆனால் இவர் அழைக்கிறார்!' அற்புதம்! அற்புதம்!!

பிறநாடுகளைத் தம் பிடியில் சிக்க வைத்து, அவைகளை வேட்டைக்காடுகளென எண்ணி, தர்பார் நடத்தும் அன்னிய ஆட்சியினையே 'ஏகாதிபத்தியம்', என்று, அரசியல் அகராதி, கூறுகிறது. பண்டிதரோ, டில்லி தர்பாரிலிருந்து விடுபட நினைக்கும் பிரதேசங்களை, ஏகாதிபத்திய ஆசையால் ஏற்படுபவை யென்கிறார்! புலியின் கையிலிருந்

டுபட நினைக்கிறது—மான் கூட்டம். அந்த மானினத்தை நோக்கி, அப்பா! என்ன கோரமான புலி ன்!', என்று யாராவது கூறுவது து விந்தைக்குரிய காட்சி — அதிம் புலியே கூறினால், அது, எத்த கைய விசித்திரம் என்பதை விளக்த் தேவையில்லை. மிராசுதார், ண்ணையாளைப்பாத்து, "அவர் ான் மிராசுதார்", என்று கூறுவதுபோல பண்டிதர், விடுதலை பெறத் துடிக்கும் பூமிப்பரப்பை, காதிபத்யம் எழிலோச்சுமிடம் ன்கிறார்! என்னே—அற்புதம் — ன்னே, இவர்தம் கூற்று.

"ஆறாயிரம் மைல்களுக்கப்பாலி ருந்து வந்தவன், அரசு புரிவதா? ம் அடிமைகளோ! அன்றி, ஊமை ளோ!! ஜெயபேரிகை எடடா — ஜயம் ஜெயம் என முழக்கடா! எங் ம் சுதந்திரம் என்பதே பேச்சு! னி இங்கே, வெள்ளையன், ஆதி த்தியம் ஒழியலாச்சு!", என்று, ங்கில ஏகாதிபத்யத்தை நோக்கி, ண்டிதரும் பிறரும், எச்சரிக்கை டுத்த போதும், இது போன்ற ளக்கம் தரவில்லை, அவன்! வேறு ல காரணங்கள் கூறினானே யொழிய, 'சுயராஜ்யம், கோராதிர்—அது, ஒருவித, ஏகாதிபத்ய ஆசை ாகும்!', என்று கூறவில்லை, அவன். றினால், உலகம், தன்னைக் கேலி செய்யும் என்பதை, அறிவான், அவன்! ஆனால், பண்டிதர், உரிமை காருவது, ஏகாதிபத்ய ஆசையால், ன்று தெரிவிக்கிறார்!

பல் நூல் கற்று, உலகமெங்கும் ற்றுப் பயணம் நடாத்தி நிமிடத் க்கொரு முறை அகில உலகப் ரச்னைகளை பற்றி அலசும், பண்டிர், அரசியல் உலகு, வியக்கக்கூடிய ளக்கமொன்றை, உரைத்தாரென் ல், அது, சாமான்யமானதல்ல.

அத்தகைய விளக்கம் — தவறு து, என்பதை அவர் அறியாமலி ருக்க முடியாது. ஆயினும், அவர், றக் காரணமென்ன?

காளிகோயில் முன், ஆட்டுக் டாவை நிறுத்தி, இருதுண்டாக்க ற்கும் பூஜாரிக்கு, தான் செய்யப் போகும் செயலால் ஆடு சாகும், ன்பது, நன்றாகத் தெரியும். அது, பாவம்' என்பதையும் அறிவான். னாலும், செய்ய வேண்டியவனா கிறான்! அங்ஙனம் செய்தால் தான், அவன் வேலையும் ஆசையும் நிறைவேற முடியும்!!

கோயில் பூஜாரியின் நிலை, இது —அரசியல் பூஜாரியாம், பண்டிதரின் நிலையும், அதுதான்.

அதனாலேயே, விசித்திர விளக்கங்களை, வேட்டையாடித் தேடும் படியான, அவசியத்துக்கு ஆளாகி, அவசர அவசரமான தத்துவங்களையெல்லாம், தயாரிக்கிறார்.

மோக போதையில், கட்டிலறையில், நடக்கும் உரையாடல்கள், பலருக்குத் தெரியும். அர்த்தமில்லாத வார்த்தைகள் அங்கே சிதறுமாம். காரணம், போதை! அதுவும் மோக போதை!! அதே மோக போதை தான் இன்று ஆட்டிபடைக்கிறது, பண்டித நேருவை. காதலர்களுக்கு மோகபோதை! இவருக்கு அதிகார மோக போதை!! ஆகவேதான் — ஒரு சமயம் ஆத்திரம் வருகிறது— மற்றோர் சமயம் அன்பு, பெருகு வெடுக்கிறது—இன்னொர் சமயம் 'என்னைவிட்டுப் போகாதடீ! என்னைக் கணம் பிரிய மனம் வந்ததோ?' என்று கெஞ்சத்தூண்டுகிறது.

நேரு போன்றோர்க்கு, இந்த போதையிருந்து வருவதை, நெடு நாட்களாகவே அறிவோம், நாம். அதனால்தான், சென்னை விஜயத்தின் போது, அவர் வெளியிட்ட விளக்கங்களைக், காணும்போது, நல்லதொரு நகைச்சுவையாகத் தென்படுகிறது, நமக்கு.

*

பண்டிதர் தந்த மற்றோர் விளக்கம்—"இப்படித் தனித்தனியாகப் பிரிந்து சென்றால், உலகம் நம்மை மதியாது!" என்பதாகும். இதனை, மிகமிக, வலியுறுத்திச் சென்றிருக்கிறார்.

மணல் வீடுகட்டி மகிழ்ந்து விளையாடும் சின்னஞ்சிறு குழந்தைகளை, 'ஐயோ! அங்கே, போகாதேம்மா— அஞ்சு கண்ணன் வருவான்' என்று அச்ச மூட்டுவது போல, பண்டிதர், கூறுகிறார், "தனித்தனியாகப் பிரிந்தால், அகில உலகத்தின் முன் நமது கவுரவம் பாழாகிவிடும்" என்று.

"நமது கவுரவம்! — 'நமது' என்றால், அந்தச் சொல்லுக்குள், அடங்கியிருப்போர் யார்?"

"இந்த நாட்டுக் குடிபடைகள்!!"

"அவர்களுக்குக் 'கவுரவம்' தரப் போகும் நலன் என்ன?"

"என்ன இப்படிக் கேட்கிறாய்? அந்தக் கவுரவம்தானே, உலக அரங்கில் நம்மை ஒளிவிடச் செய்யும்!"

"அப்படியானால், ஒன்றாயிருக்கும் இப்போது ஒளிவிடுகிறதா?"

"ஓ! ஐக்கியநாடுகள் சபையில் விஜயலட்சுமி தலைவராயிருக்கிறார்— அனைவரும் பண்டித நேருவின் அரசியலறிவைப் பாராட்டுகிறார்கள் — கொரியாவில் சென்று அமைதியை உண்டுபண்ண நம்முடையபடைகள் சென்றுள்ளன."

"சரி! இதனால் என்ன லாபம்?"

"பண்டித நேருவின் ஜோதி, ஜொலிக்கிறதே! பண்டிதநேரு என்றால் இந்தியாவின் ஜோதி ஜொலிக்கிறது என்றுதானே அர்த்தம்!!

"வா, வழிக்கு! அவருடைய ஜோதி ஜொலிப்பதற்காக, இத்தனை பெரிய இந்தியா இருக்கவேண்டும் அல்லவா?"

இப்படி ஒரு உரையாடல் நடந்தால், முடிவு இப்படித்தான் இருக்கும். உண்மையுங்கூட—பண்டிதர், 35 கோடி மக்களின் தலைவர்—என் பதாலேயே அவருக்கோர் முக்கியத்துவம், வளர்ந்து வருகிறது, அகில உலக அரங்கில். அமெரிக்கா மாலை சூட்ட, சர்ச்சில் சாமரம்வீச, ரஷ்யா பாராட்ட, பளபளவென்று, ஜொலிக்கிறார். இந்த ஜொலிப்பை இழந்துவிட, எந்த ஏகாதிபத்யவாதியும் விரும்பான்! பிரிட்டிஷ் மன்னனின் முடிக்கு இந்தியா போன்ற நாடுகள் அடிமைப்பட்டுகிடந்ததாலேயே ஜொலிப்பு அதிகமாயிருந்தது—அதனாலேயே இன்னும் காமன்வெல்த்' நாடுகள் என்ற பெயரிலாவது தன்வசம், பல 'காலனிகள்' இருப்பதைக் காட்டிக் கொள்ள வெள்ளைக்காரன் ஆசைப் படுகிறான். அந்தஆசை ஏகாதிபத்ய வாதிகளுக்கு ஏற்படுவது சகஜம்.

இந்த ஜொலிப்பின்மீது, மாசு படிகிறது—இதுபோது.

அதுவும், கடந்த ஜாலை 15 சம்பவம், பண்டிதரின் பள பளப்பில், களங்கம் ஏற்படுத்திவிட்டது.

35 கோடி மக்களைக் காட்டி — அவர்களின் ஒரே தலைவர் எனும் உருவத்தைக்காட்டி—அகில உலக அரங்கில், ஜொலிக்கிறார் நேரு.

ஆனால், கடந்த 15, 'இந்தியர் ஒருவரல்ல—பலர்' எனும் உண்மையை உணர்த்திவிட்டது. உலகக் கண்களைத் திறந்துவிட்டது — "பழம்

பெரும் இனம், டில்லியின் தலைமைக்கு ஆட்பட்டுக் கிடக்க விரும்பவில்லை. அதனாலேயே, தென்னாட்டில், 'திராவிட நாடு திராவிடருக்கே!' எனும் முழக்கம், எழும்பியிருக்கிறது. அந்த முழக்கத்தின் விளைவாக, ஒருநாள் தென்னாடு முழுமையுமுள்ள ரயில்கள் நின்றன. முழக்கமிடுவோரை பண்டிதர்நேரு, ஏசிப்பேசினாராம். அதற்கு, இத்தகைய கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார்கள், தென்னாட்டு மக்கள்'' இவ்விதம் வெளிநாட்டு ஏடுகள், விளக்கம் எழுதியிருக்கின்றன.

பண்டிதருக்கு, இது இனிப்பாகவா இருக்கமுடியும்?

அதனால்தான், தென்னாட்டை நோக்கி வந்தார்—சினந்தார்—செப்புகிறார், இப்படிச் செய்தால் அகில உலகில் நமக்கு இருக்கும் கவுரவம் போய்விடும்'' என்று புலம்புகிறார்.

கவுரவமாம்!—யாருக்கு? மக்கள் அறிவர்.

பண்டிதர், எதனைக் கவுரவம் எனக் கருதுகிறாரோ, அந்தக் கவுரவம் எத்தனை இழிவையும் பழியையும் உண்டாக்குகிறது, தெரியுமா? தன்னுடைய பெருமையைக் காட்டிக்கொள்ள அண்மையில் கொரியாவுக்கு இந்தியப் படைகளை அனுப்பினார். கொரியப் போரின் விளைவாக சமாதான முறையில் பிரச்னைகளை தீர்த்து வைப்பதற்கென்று.

''இந்தியா இவ்வளவு பொறுப்பேற்றுக்கொண்டதைப் பாரீர்! என்னே, பண்டித நேருவின் அரசியல் வியூகம்!'' என்று நாமாவளிபாடின ஏடுகள். ஆனால், இன்று, கொரியாவில் நடப்பதென்ன!

கொரிய மக்கள், இந்தியாவின் மீது, காரியுமிழ்கிறார்கள்—சமாதானம் உண்டுபண்ணச்சென்ற இந்தியப்படைகள் கொரிய மக்களைச் சுட்டுத்தள்ளும் நிலைமை வளர்ந்துவிட்டது—இந்தக் கோரத்தைக் காணுவோர், திகைக்கிறார்கள்.

பூரிப்புடன், பெருமிதத்துடன்-கொரியா சென்ற படைகளுக்கு விடையளித்தார், பண்டிதர். இன்றோ டில்லியில், கவலையிலாழ்ந்தவராய் இருக்கிறாராம்.

கொரிய மக்கள், இந்தியாவைத் தூற்றுகிறார்கள்.

இந்தியாவை, அமெரிக்காவுடன் ஒப்பிட்டுத் தூற்றுகிறார்கள். இது 'அகில உலக ஜோதி'யைப் பறைசாற்றச் சென்றதற்குக் கிடைத்த பரிசு!

அகண்ட 'பாரதம்' இருந்தால், இதுபோன்ற 'பரிசு'கள் தான் கிடைக்கும்—'பெரிய நாடு' எனும் திமிரில், பல 'சிறிய நாடுகளின்' வாழ்வில் இந்தியா, தலையிடும்—ஏளனத்தையும் பழியையும் சுமக்கும்.

இதனை, பண்டிதர், எண்ணினாரில்லை—அவருக்கு, 'ஜொலிப்பில்' அறிவு மங்குகிறது—ஆகவே, அலறுகிறார்.

அவர், அலறவேண்டிய அளவுக்கு ஜூலை 15 அறப்போர், செய்துவிட்டது. வெளிநாடுகளில் இருப்போர், நேருவை, முன்பு எந்தக் கண்கொண்டுபார்த்தார்களோ, அந்தக்கண்கொண்டு இன்று பார்க்கவில்லை. ''இப்படியெல்லாம் கூறப்பட்டதே, நேருவைப்பற்றி—அங்கும், பல பிரச்னைகள் உள்ளனவாமே!'', என்று உலக அரங்கில், உரையாடல்கள், துவங்கிவிட்டன. அது? காதுக்கு எட்டஎட்ட, கனலாகிறார்—நமது பண்டிதர். காரசாரமாகக் கண்டிக்கிறார், நம்மை— ''இந்தியாவின்கவுரவம், இவர்களால் பாழாகிறதே,'' என்று அங்கலாய்க்கிறார்.

பண்டிசருக்கு, அகிலஉலக அரங்கில், ஏளனத்தையுண்டுபண்ணுவது அல்ல, நமக்குள்ள விருப்பம். அவர் புகழ் ஜொலிக்கட்டும்!-மகிழ்வோம், நாமும். ஆனால், அந்த ஜொலிப்புக்காக, பல இனமக்களை, ஒரே கூண்டில்போட்டு, ''சர்க்கஸ்'' நடத்த விரும்புகிறாரே, அது சரியா, என்பதுதான், நமது கேள்வி.

''சென்னையில் பிரிவினை—பம்பாயில் பிரிவினை——ஐதராபாத்தை ஆந்திராவுடன் சேர்ப்பது-இவ்விதம், மாற்றங்களை உண்டாக்கிக்கொண்டேபோனால், என்ன ஆவது? இந்தியா எனும் பெயர் போய்விடுமே! ஆகவேதான், அனைத்தும் ஒன்றாகயிருக்கவேண்டும் என்று நான் கூறுகிறேன்,'' என்கிறார்.

அவ்விதம், ஒன்றாயிருப்பதால், இன்னின்ன லாபம் மாகாணங்களுக்குஎன்று அவர், விவரிக்கவில்லை.

உலக அரங்கில், நமது கவுர[...]
ஜொலிக்கும் என்று மட்டு[...]
கூறுகிறார்.

நம்மைவிடச் சிறியதான, இங்[...]
லாந்தும், இலங்கையும் — செ[...]
கோஸ்லோவேக்யாவும் - யுகோஸ்[...]
—இஸ்ரேலும்—எகிப்தும், உல[...]
அரங்கில், ஜொலிக்காமலாயிரு[...]
கின்றன?

உலக அரங்கில் புகழ்பெறு[...]
தற்கு, நாட்டின் எல்லையும் ஜ[...]
வளமும், பெரிதாயிருக்க வேண்[...]
மென்பதல்ல—அளவுகோல்.

அதனை, பண்டிதர் படித்த, உல[...]
அரசியல் உரைத்திருக்கவேண்டு[...]
ஆனால், அவருக்கு, தன்னுடை[...]
ஜோதியின்மீது, அதிக அக்கறை[...]
பிறந்து விட்டது—துரதிர்ஷ்டமா[...]
சம்பவம்தான்.

அதனாலேயே, தனது நே[...]
கெட்ட போக்கைக் கண்டிக்கு[...]
கழகத்தார்வளர்ந்துவிட்டது, கா[...]
சகிக்கமுடியவில்லை, அவரால்.

மனவேதனையின் விளைவா[...]
எழும், அவரது சீற்றம்காண, மகி[...]
கிறோம், நாம். நம்முடையஉரிமை[...]
குரல், அவருக்குசீற்றம்உண்டாக்கு[...]
மளவுக்கு—அவர் கூறும் போ[...]
ஜொலிப்பின் புகழை மங்கச்செய்[...]
மளவுக்கு—உயர்ந்துவிட்டது.

இந்த வெற்றியைப் பெற்றுவி[...]
டோம்—இந்த வெற்றியைப் பெ[...]
றுத்தந்த நமது பொதுச்செயலா[...]
ரும், கழக முன்னணி வீரர்களும்[...]
சிறைச்சாலைக்குள் கிடக்கிறார்கள்.

பண்டிதர் பதறியதையும்-பற்ப[...]
பேச நேர்ந்ததையும்அறியும்போ[...]
அவர்கள், அகமகிழ்ச்சி அடைவா[...]
கள்.

அந்த மகிழ்ச்சியை மங்காம[...]
வளர விடுவோம், நாம்.

ஜின்னா, எழுப்பிய குரலைச் சிந்[...]
னையில் கொள்ளுங்கள்—பக்கத்தி[...]
உருவாகிக்கிடக்கும் 'பாகிஸ்தான[...]
தையும்' காணுங்கள் — அது உ[...]
வாகுமுன்பு, பண்டிதர்குமுறம்வீசி[...]
இழிமொழிகளையும் எண்ணுங்க[...]

ஜின்னா, கோரிய, பாகிஸ்தான[...]
தைவிடப் பன்மடங்கு வலிவா[...]
குறிக்கோளும், காரணங்களும்[...]
கொண்டதே, நம்முடைய 'திராவி[...]
நாடு'. எனவே, வெற்றி நிச்சய[...]
என்பதிலும், ஐயமென்ன! அதிலு[...]
இருள் விலகும்—இந்நோக்தில்[...]

.Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.